# வ. உ. சி.
# வளர்த்த தமிழ்

மா. ரா. அரசு

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

# வ. உ. சி.
# வளர்த்த தமிழ்

மா.ரா. அரசு

International Institute of Tamil Studies
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை – 600 113.

வஉசி அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியோர் - கொடையாளர் பலர்)

வரிசை எண்: 6 நாள்: 18-11-2002

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | Va.U.Ci. vaḷartta tamiḻ |
| Author | : | M.R. Arasu<br>Tamil Dept., Pachaiyappa's College,<br>Chennai. |
| General Editor | : | Dr. S. Krishnamoorthy |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>C.P.T. Campus, Chennai - 600 113.<br>Phone : 254 2992 |
| Publication No. | : | 439 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Year of Publication | : | 2002 |
| Paper Used | : | 18.6 kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type Used | : | 10 points |
| No. of Pages | : | viii + 72 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 20/- |
| Printing | : | United Bind Graphics<br>101-D, Royapettah High Road<br>Chennai - 600 004 |
| Subject | : | Tamilology |


அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

## அணிந்துரை

இந்திய மக்களின் உள்ளத்தில் நீங்கா இடத்தைப் பெற்றவர் வ.உ.சி. அவரிடம் விடுதலையின் மீது எந்த அளவிற்கு வேட்கை வேரூன்றி இருந்ததோ அதே அளவுக்குத் தமிழின் மீதும் இருந்தது என்பதை ஆன்றோர் பலரும் அறிவர். கேட்டார் பிணிக்கும் தகையவாய்ச் சொற்பெருக்காற்றும் தனித்திறம் மிக்கவர் வ.உ.சி.

தம்முடைய மேடைப்பேச்சுக் கலையால் நாட்டு மக்களிடையே விடுதலைப் போராட்ட உணர்வை விதைத்தார். அவருடைய பேச்சைக் கேட்ட பலரும் குறிப்பாக, நாட்பணி செய்வோர் முதற்கொண்டு பல தரப்பினரும் அவருடைய பேச்சுக்கு மகுடி வயப்பட்ட பாம்பு போலத் தன்னிலை இழந்தனர். அவருடைய பேச்சு - பாமர மக்களுக்கு நாட்டு நடப்புகளைப் புரிய வைக்கும் எளிய பேச்சு; விடுதலையின் தேவையை உணரவைக்கும் உணர்ச்சிப் பேச்சு; மக்களை இயக்கமாகச் செயல்படவைக்கும் தோழமைப் பேச்சு என்று இவ்வாறாக வ.உ.சியின் சொற்பொழிவுகளைச் சுவைத்துப் பார்த்தவர்கள் பலர். வ.உ.சியின் பேச்சைக் கேட்ட ஒவ்வொருவரும் அவருடைய பேச்சுத்திறனையும் வெளிப்பாட்டு உத்திகளையும் அவரவர்களின் அனுபவ நிலையில் இருந்து வியந்து பாராட்டி இருக்கிறார்கள் என்பதைக் காணமுடிகிறது. இத்தகு வ.உ.சி. தனித் தமிழ் ஆர்வலராகவும் இருந்திருக்கிறார். இந்நூலாசிரியர், வ.உ.சி.யைப் பற்றிய பலரது கருத்துகளில் காணப்படும் முரண்பாடுகளுக்குப் பல்வேறு தரவுகளின் அடிப்படையில் விடை கண்டிருக்கிறார்.

குறிப்பாக வ.உ.சி. ஒரு சிறந்த. இதழாளர் என்ற நிலையில் விவேகபாநு, இந்து நேசன் போன்ற இதழ்களோடு அவருக்கிருந்த தொடர்பு பற்றிய புதிர்களுக்கு அறிவார்ந்த நிலையில் தீர்வு கூறியிருப்பது எண்ணி மகிழத்தக்கது.

பலகொடையாளர்கள் சேர்ந்து அமைத்த வ.உ.சி. அறக்கட்டளையின் சொற்பொழிவு வரிசையில் ஆறாம் சொற்பொழிவாக இச்சொற்பொழிவு அமைகிறது. இச்சொற்பொழிவை மிகக் மிகக் குறுகிய காலத்தில் உருவாக்கித் தந்த பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த்துறைப் பேராசிரியர் மா.ரா. அரசு அவர்களுக்கு நிறுவனத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்ற கூற்றுக்கு இணங்க அழகிய நடையில் எளிய முறையில் வ.உசி. பற்றிய புதிய சிந்தனைகளையும் அவருடைய தமிழ் வளர்ச்சிக்கான நோக்குகளையும் ஆசிரியர் இங்கு எடுத்துக்கூறியுள்ளார். இவ்வகையில் பேராசிரியர் மா.ரா. அரசு அவர்களுக்குப் பாராட்டுகளும் வாழ்த்துகளும் உரியன. இச்சொற்பொழிவை வ.உ.சி. வளர்த்த தமிழ் என்ற நூலாக வெளியிடுவதில் இந்நிறுவனம் பெரிதும் மகிழ்வெய்துகிறது.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு கல்வியமைச்சர் முனைவர் மு.தம்பிதுரை அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு-மற்றும் அறநிலையத்துறைச் செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா, இ.ஆ.ப., அவர்களுக்கும், கூடுதல் செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப., அவர்களுக்கும், என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

இந்நூலிற்கு மெய்ப்புத் திருத்தம் செய்ய உதவி புரிந்த முனைவர் தா. ரெங்கநாதன், முதுநிலை ஆராய்ச்சியாளர், தமிழ் மொழி மற்றும் மொழியியல் புலம் அவர்களுக்கும், இந்நூலினை ஒளியச்சுக் கோப்புச் செய்த கணிப்பொறியாளர் திருமதி இலட்சுமி அவர்களுக்கும், இந்நூலினை அழகுற அச்சிட்டுத்தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கும் நன்றி.

சென்னை
14-11-2002 இயக்குநர்

## ஆசிரியரைப் பற்றி



பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த் துறையில் பணியாற்றிவரும் இவர் இதழியல், வாழ்க்கை வரலாறு ஆகிய துறைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். தந்தையாரின் நினைவாக அவர் பெயரில் 'டாக்டர் மா. இராச மாணிக்கனார் இதழியல் ஆய்வு மையம்' என்ற அமைப்பை 1983 முதல் நடத்தி வருபவர்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் டாக்டர் மா. இராச மாணிக்கனார் இதழியல் ஆய்வு மையமும், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை வானொலி நிலையம், பச்சையப்பன் கல்லூரி, காஞ்சி மணிமொழியார் தமிழ்ப் பேரவை முதலியவற்றுடன் இணைந்து இதழியல் கருத்தரங்குகள் பல நடத்தியுள்ளன (1997-1999, 2001). அவற்றுள், 'தமிழில் இதழியல்' என்னும் தலைப்பில் அமைந்த பன்னாட்டுக் கருத்தரங்கம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

'நாட்டிற்கும் மொழிக்கும் இனத்திற்கும் உழைத்துச் சாதனை படைத்த பெரியவர்களின் வரலாறுகளை முறையாகப் பதிவு செய்தல்' என்பதை முதன்மை நோக்கமாகக் கொண்ட, 'டாக்டர் மா. இராசமாணிக்கனார் ஆய்வு வட்டம்' என்ற அமைப்பைத் தக்கவர்களோடு இணைந்து தொடங்கி (2001) செயல்பட்டு வருபவர். இந்த அமைப்பின் முதல் முயற்சியாக வெளிவந்த நூல் திருமிகு வல்லிக்கண்ணன் அவர்களுடைய தன் வரலாற்று நூலான 'வாழ்க்கைச் சுவடுகள்'.

# முன்னுரை

*பதிப்பு, உரை, மொழிபெயர்ப்பு, கவிதை போன்ற பல துறைகளிலும் தடம் பதித்தவர் வ.உ.சி (1872-1936). என்றாலும் மேடைப் பொழிவுகள், தனித்தமிழ் ஈடுபாடு போன்ற சில துறைகள் சார்ந்த செய்திகள் மட்டுமே இந்நூலில் பதிவு செய்யப் பெற்றுள்ளன.*

*வ.உ.சி. அறக்கட்டளையின் சார்பில் இப்பொழிவினை நிகழ்த்தும் வாய்ப்பை எனக்களித்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவன அறக்கட்டளைப் பொழிவாளர்கள் தேர்வுக் குழுவினர்க்கு நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் நிறைவடைகிறேன்.*

*மா.ரா. அரசு*

# நூலின் உள்ளே


1. அரசியல் மேடைப் பொழிவும் வ.உ.சி.யும் 1

2. வ.உ.சி.யும் தனித்தமிழும் 13

3. வ.உ.சி.யின் இதழியல் அனுபவங்கள்
- சில சிந்தனைகள் 25

4. புதுச்சொல்லாக்கம் - வ.உ.சி.யின் பார்வை 52

5. 'தமிழில் எழுத்துக்குறை'
- வ.உ.சி.யின் கண்ணோட்டம் 61

# அரசியல் மேடைப்பொழிவும் வ.உ.சி.யும்

இன்று பெருவழக்காகவும் இயல்பாகவும் அனைவரும் அறிந்த ஒன்றாகவும் நடைமுறையில் உள்ள அரசியல் மேடைப்பேச்சு என்பது ஒருகாலத்தில் வ.உ.சி.யின் அரசியல் வாழ்க்கையின் ஆரம்ப காலத்தில் அரிய பொருளாகவே இருந்தது. சொற்பொழிவுக் கலையை-மேடைப் பேச்சைத் தொடங்கி வைத்தவர் என்ற வகையில் குறிப்பிடத்தக்கவர் ஜி.சுப்பிரமணிய ஐயர் ஆவார்.

ஜி. சுப்பிரமணிய ஐயர் தொடங்கிவைத்த மேடைப்பேச்சை-அரசியல் சொற்பொழிவை ஒரு கலையாகவே வளர்த்துப் பாமர மக்களை அரசியல் விழிப்புணர்வு கொள்ளச்செய்து விடுதலை இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றிக்காட்டிப் புதிய வரலாறு படைத்தவர் வ.உ.சி. மேடைத் தமிழ் வரலாற்றில் இவருக்கு உரிய இடம் இனிவரும் பக்கங்களில் விளக்கப்பெறும்.

1905இல் அன்றைய இந்தியத் தலைமை ஆளுநராக இருந்த கர்சன் வங்காளத்தை இரண்டாகப் பிரித்தது இந்திய விடுதலை இயக்கத்திற்குப் புதிய வேகத்தைக் கொடுத்தது; 'சுதேசி இயக்கம்' பிறந்தது. வங்காளத்தில் தோன்றிய இப்புதிய இயக்கம் இந்தியத் துணைக்கண்டம் முழுதும் பரவியது. தலைவர்கள் முன்வந்து சுதேசி இயக்கத்தை மக்கள் இயக்கமாக்கும் முயற்சியில் முனைப்போடு ஈடுபட்டனர்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகளில் ஒடுக்கப் பெற்றும் ஒதுங்கியும் இருந்த தமிழர்களை ஒருங்கிணைத்து ஒரே தடத்தில் சிந்திக்கத் தூண்டியவர் வ.உ.சி. பல்வேறு வகைப்பட்ட மக்களை ஒன்று சேர்ப்பதும் ஒரே இலக்கை நோக்கிச் செயல்பட வைப்பதும் எத்துணைக் கடினமான முயற்சி என்பதை வரலாற்றின் பக்கங்களைப் புரட்டிப் பார்ப்பவர் அறிவர். தமிழ்நாட்டு வரலாற்றில் -விடுதலை இயக்கத் தொடக்க காலத்தில் அதைச் சாதித்துக்காட்டியவர் வ.உ.சி.; அதற்குத் துணை நின்றது அவரது பேச்சாற்றல்.

மக்கள் அறியாமை இருளில் மூழ்கிக்கிடந்த தெளிவற்ற வாழ்க்கைச் சூழலில், வ.உ.சி. மக்களைத் தட்டியெழுப்பி உணர்வு கொள்ளச் செய்தமை இந்திய விடுதலை இயக்க வரலாற்றில் மட்டுமன்றித் தமிழ் மேடைப் பேச்சு வரலாற்றிலும் தனித்துவம் வாய்ந்த சாதனையாகும்.

தம் பேச்சாற்றலால், ஆற்றல்மிக்க சொற்பொழிவுகளால் வ.உ.சி. மக்களை இயக்கியமையை வரலாறு பலநிலைகளில் பதிவுசெய்து வைத்துள்ளது. வ.உ.சி.யின் வீரம் செறிந்த, பொருளாழம் நிறைந்த சொற்பொழிவுகளை நேரில் கேட்டு நாட்டுணர்வு பெற்றவர்களும் அச்சொற்பொழிவுகளின் தாக்கத்தால் அன்றைய திருநெல்வேலி மாவட்டத்தில், குறிப்பாகத் தூத்துக்குடியில் ஏற்பட்ட மக்கள் எழுச்சியை நேரில் கண்டவர்களும் அரவிந்தர் போன்ற இந்தியத் தலைவர்களும் பல்வேறு கருத்துகளைத் தெரிவித்துள்ளனர். அத்துடன் அன்றைய ஆங்கில அரசின் ஆவணங்களும் வ.உ.சி.க்கு எதிராக நடத்தப் பெற்ற வழக்கில் வழங்கப்பெற்ற தீர்ப்புகளும் 'இந்து', 'சுதேசமித்திரன்' போன்ற நாளிதழ்களில் இது தொடர்பான செய்திகளைப் பதிவு செய்துள்ளன.

அவற்றை அடிப்படைச் சான்றுகளாகக் கொண்டு, அரசியல் மேடைப்பேச்சை-மேடைத் தமிழை-இன்றுவரையில் நின்று நிலவும் மேடைப் பேச்சு என்னும் புதிய கலையை வ.உ.சி.

உருவாக்கி வளர்த்து வரலாறு படைத்தமையை விரிவாக அறியலாம்.

"1907 ஆம் ஆண்டு, ஒருநாள் நான் கற்றுவந்த இந்து கலாசாலையில் மாணாக்கரிடையே ஒரு பரபரப்பு உண்டாகியிருந்தது. அன்று மாலை சுமார் ஐந்தரை மணிக்குத் தூத்துக்குடியிலிருந்து தேசபக்தர் சிதம்பரம் பிள்ளை திருநெல்வேலிக்கு வந்து கீழரத வீதியில் அம்மன் சன்னதிக்கு எதிரே பேசப் போகிறார் என்று ஒரு வதந்தி. குறித்த நேரத்திற்கு முன்பே ஜனங்கள் பெருந்திரளாகக் கூடியிருந்தார்கள். நானும் கலாசாலையிலிருந்து நேரே போய்ச் சேர்ந்தேன். குறித்த நேரம் கடந்துவிட்டது. ஆனால், ஜனங்கள் காத்துக் கொண்டிருந்தார்களேயல்லாமல் கலைந்து போகவில்லை. சுமார் ஆறுமணிக்கு மேல் வ.உ.சி. வந்து சேர்ந்தார்.

அவரைப் பார்த்தவுடன் முதலாவது இவர் என்ன பேசமுடியும் என்று தான் நினைத்தேன். ஆனால், அவர் தொடங்கிய சிறிது நேரத்திற்கெல்லாம் விஷயங்களைத் தெளிவாக எடுத்துச் சொன்ன முறை என்னை வசீகரித்தது.

அந்நிய அரசாங்கத்தினர் நாம் சிறிதும் முன்னேற வொட்டாதபடி வாணிகம் முதலியன புரிந்து நம்நாட்டுச் செல்வத்தைச் சுரண்டிக் கொண்டு போவதைக் குறித்து விஸ்தாரமாகப் பேசினார். ஒவ்வொருவனும் தேசாபிமானமுடையவனாக இருத்தல் வேண்டும் என்று வற்புறுத்தினார்.

இதைப்பற்றிப் பேசும்பொழுது அவர் தம்மையே மறந்து பரவசமாய் நின்று கேட்போர் உள்ளத்தை நேரடியாய்த் தாக்கினார் என்று சொல்லவேண்டும்.

சுமார் ஒரு மணிநேரம் பேசியிருப்பார். கேட்ட மக்கள் அனைவரும் மிக்க குதூகலமுற்றனர்". *(எஸ்.வையாபுரிப் பிள்ளை, 'நான் கண்ட வ.உ.சி.'; வ.உ.சிதம்பரம்பிள்ளை - கட்டுரைகள் தொகுதி, பக். 4-5)*

அன்று, திருநெல்வேலியில் கீழரத வீதியில் கூடியிருந்த மக்கள் கூட்டத்தை இரு பிரிவுகளில் அடக்கலாம். ஒரு பிரிவினர் வ.உ.சி.யின் சொற்பொழிவை முன்னமே கேட்டு மகிழ்ந்தவர்கள்; இன்னொரு பிரிவினர் வ.உ.சி.யின் பேச்சைக் கேட்க வேண்டும் என்ற ஆர்வத்தில் முதன் முறையாக வந்தவர்கள். முன்னரே கேட்டவர்களும் புதிதாகக் கேட்க விரும்பியவர்களுமான அந்தப் பெருந்திரளான மக்கள் கூட்டம் முழுவதும் வ.உ.சி.யின் ஒரு மணிநேரப் பேச்சைக் கேட்டு மகிழ்வுற்றது என்பதுதான் இங்கு நினைவில் கொள்ளவேண்டிய செய்தியாகும்.

பாமர மக்களும் புரிந்து கொள்ளும்படியாகப் புரிந்து ரசிக்கும்படியாகப் பேசும் -எடுத்துரைக்கும் ஆற்றல் - சொற்பொழிவுத் திறன் வ.உ.சி.யிடம் இயல்பாக இருந்தது. இதைப் பின்வரும் சான்றும் உறுதி செய்வதாக அமைகிறது.

"நான் மெட்ரிக்குலேஷன் வகுப்பில் படிக்கும் போது (1907) ஒரு நாள் மாலையில் மாணவர்கள் திரள் திரளாகக் கலாசாலை மூடியதும் ஆற்றங்கரை நோக்கிச் செல்வதைக் கண்டேன். அங்கு யாரோ பிரசங்கம் செய்வதாக அறிந்தேன். நான் அதுவரை பிரசங்கம் எதுவும் கேட்டதில்லை. அதனால், மிகுந்த ஆவலுடன் என் சகாக்களுடன் நதிமணல் நாடிச் சென்றேன்.

அங்கே ஐயாயிரம் ஜனங்களுக்கு அதிகமாகக் கூடியிருந்தனர். தவசு மண்டபத்தின் படியில் ஏறி நின்றுகொண்டு ஒரு குள்ளமான மனிதர் பேச ஆரம்பித்தார்.

இவர்தானா பிரசங்கி, இவரைப் பார்த்தால் பிரமாதமாகத் தோன்றவில்லையே என்று நானும் என் நண்பர்களும் பேசிக் கொண்டோம். ஆனால் அந்த மனிதர் பேசத் தொடங்கினாரோ இல்லையோ நாங்கள் இந்த உலகத்தில் இருக்கவில்லை. மெய் மறந்து போய் வாயைப் பிளந்து கொண்டு அப்படியே உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்தோம். வ.உ.சி. அன்று எழுப்பிய சுதந்திர தாகம் இன்னும் எனக்கு அடங்கினபாடில்லை" *(பொ. திருகூடசுந்தரம், 'வ.உ. சிதம்பரம்பிள்ளை- கட்டுரைகள், தொகுதி, ப. 17)*

என்று ஐம்பதுகளின் தொடக்கத்தில் - ஏறக்குறைய நாற்பத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு எழுதும்போது கூட 1907-இல் வ.உ.சி.யின் பேச்சு ஏற்படுத்திய தாக்கத்தில் இருந்து விடுபட முடியாத நிலையையே பொ. திருகூடசுந்தரம் வெளிப்படுத்துகிறார் என்பது வ.உ.சி.யின் பேச்சாற்றலின் வலிமையைப் புலப்படுத்துவதாகும்.

"அந்த காலத்தில் பொதுக்கூட்டம் கூட்டிப் பேசும் முறையைப் பிரசித்தமாக்கி, அரசியல் பணியை இன்றியமையாத சமுதாயப் பணியாகக் காட்டியவர் சிதம்பரனார்" (வ.உ.சி. - சில நினைவுச் சுடர்கள்', சுடர் - வ.உ.சி. மலர், தில்லி தமிழ்ச் சங்கம், ப.50) என்று வ.உ.சி. திட்டமிட்டு உருவாக்கி வளர்த்த மேடைப் பேச்சின் வரலாற்றுச் சிறப்பை மிகச் சரியாக மதிப்பீடு செய்துள்ளார் பி.ஸ்ரீ. இருபதாம் நூற்றாண்டின் முதல் பத்து ஆண்டுகளில் வ.உ.சி.யின் வீரமுழக்கங்களைக் கேட்டு மகிழ்ந்தவரும் அந்தக் காலச் சூழலை நேரில் கண்டு உணர்ந்தவருமான பி.ஸ்ரீ.யின் இந்தக் கருத்து மிகவும் இன்றியமையாததாகும்.

வ.உ.சி.யின் தனிச் சிறப்புகளுள் ஒன்று, பாமர மக்களுக்கு நாட்டு நடப்புகளைப் புரியவைத்து விடுதலையின் தேவையை உணரவைத்து அவர்களை ஓர் இயக்கமாக்கிச் செயல்பட வைத்ததாகும். அதற்கு மேற்குறித்த 'பொதுக்கூட்டம் கூட்டிப்

பேசும் முறையைப் பிரசித்தமாக்குதல்' என்னும் உத்தியைத் தொலை நோக்கோடு அவர் பயன்படுத்தினார்.

இப்படித் திட்டமிட்டுச் செயல்பட்டதால்தான் அன்றைய சென்னை மாநிலத்தில் வெள்ளையர் எதிர்ப்புணர்ச்சி நிலவும் ஒரே இடமாகத் தூத்துக்குடியை வ.உ.சி. யால் உருவாக்க முடிந்தது. (ஆ. சிவசுப்பிரமணியன், வ.உ.சி.யும் முதல் தொழிலாளர் வேலை நிறுத்தமும், ப. 48).

> "தூத்துக்குடியின் பெயர் நாடெங்கும் முழங்கிற்று. சிதம்பரம் பிள்ளை அவர்களின் சிம்ம கர்ஜனைப் பிரசங்கத்தைக் கேட்டபின் தூத்துக்குடி மகா ஜனங்களுக்கு உறக்கம் கிடையாது. அதிகார வர்க்கத்தினர் நடுக்கங் கொண்டனர். தூத்துக்குடியிலே சிதம்பரம் பிள்ளை அவர்கள் முடிசூடா மன்னனாய் விளங்கினார். அவர் சொன்னது சட்டம்" ('வ.உ. சிதம்பரம் பிள்ளை', தமிழ்ப் பெரியார்கள், ப. 98)

என்னும் வரா.வின் கூற்று அரசு ஆவணத்திற்கு உரிய விளக்கமாக அமைகிறது.

இம்மக்கள் எழுச்சியை ஒட்டி நிகழ்ந்த ஒரு சுவையான நிகழ்ச்சி "நாவிதர் சவரம் செய்ய மறுக்கிறார்" (A barber refused to shave) என்ற தலைப்பில் 'இந்து' நாளேட்டில் (5.3.1908) வெளியாகியுள்ளது.

> "வெள்ளையர் ஆதரவாளரான ரெங்கசாமி ஐயங்கார் என்பவர் சவரம் செய்து கொள்வதற்காக ஒரு நாவிதர் முன் அமர்ந்தார். அந்நாவிதர் சுதேசி இயக்கத்தில் ஈடுபாடு கொண்டவராவார். தூத்துக்குடியில் மக்கள் எழுச்சியை அடக்க வெளியூரிலிருந்து போலீசைத் தருவிக்க வேண்டுமென்ற மாவட்ட ஆட்சித்தலைவரின் கருத்தை அவர் ஆதரித்தது

> உண்மைதானா என்று நாவிதர் வினவினார். ரெங்கசாமி ஐயங்கார் இது உன் வேலையல்ல என்று பதிலளித்தார். உடனே நாவிதரும் உமக்கு சவரம் செய்வது என்னுடைய வேலையல்ல என்று கூறிச் சென்று விட்டார்.
>
> பின்னர் ரெங்கசாமி ஐயங்கார் மற்ற நாவிதர்களிடம் செல்ல, அவர்களும் சவரம் செய்ய மறுத்துவிட்டார்கள்.
>
> குதிரை வண்டி ஓட்டுபவர்களும் அவருக்கு வண்டி ஓட்ட மறுத்துவிட்டார்கள்; உணவு விற்பவர்கள் அவருக்கு உணவு விற்க மறுத்து விட்டனர்".

இதன் தொடர்ச்சியாக மற்றொரு செய்தியும் (6.3.1908) 'இந்து' நாளேட்டில் வெளியாகியுள்ளது. அச்செய்தியின் மூலம் ரெங்கசாமி ஐயங்காரின் சலவைத் தொழிலாளி அவருக்குச் சலவை செய்ய மறுத்துவிட்டதுடன், அதற்குமுன் எடுத்துச் சென்ற துணிகளைத் திருப்பிக் கொடுக்கவும் மறுத்துவிட்டார் என்பதை அறியமுடிகின்றது (ஆ. சிவசுப்பிரமணியன், முன் குறிப்பிட்ட நூல், பக்.33-34).

1908 மார்ச்சுத் திங்களில் தூத்துக்குடியில் நிலவிய மக்கள் எழுச்சியினை இச்செய்திகள் படம்பிடித்துக் காட்டுகின்றன.

> "மேடையில் ஏறிவிட்டால், மழையைப் போலப் பொழிவார். கேட்பவர்கள் ஒரு சமயம் சிரிப்பார்கள்; திடீரென்று கண்ணைத் துடைத்துக் கொள்வார்கள்; பின்னர் அப்படியே வாயைத் திறந்துகொண்டு கேட்டுக் கொண்டிருப்பார்கள். பிள்ளையின் பிரசங்கமே தனித்தன்மை கொண்டதாகும்" (முன் குறிப்பிட்ட நூல், ப.101)

என்னும் வரா.வின் கூற்றைப் படிப்பவர்களுக்கு, ரெங்கசாமி ஐயங்கார் தொடர்பான நிகழ்ச்சியில் நாவிதர், சலவைத் தொழிலாளி,

குதிரை வண்டி ஓட்டுபவர், உணவு விடுதி நடத்துபவர் ஆகியோரின் நடவடிக்கைகள் வியப்பை ஏற்படுத்தா; மாறாக அவர்கள் செயல்கள் சரியானவையே என்ற உணர்வையே ஏற்படுத்தும். தனித்தன்மை வாய்ந்த தம்முடைய மடைதிறந்த வெள்ளமெனும் பேச்சால் மக்களைத் தாம் விரும்பிய வாறெல்லாம் ஆட்டுவித்த பேராற்றல் வாய்ந்தவரான வ.உ.சியைப் 'பேச்சுக்குச் சிதம்பரம்' (வீரவிளக்கு வ.வே.சு. ஐயர், ப.5.) என்று சுத்தானந்த பாரதியார் போற்றியுள்ளது பொருத்தமானதேயாகும்.

வ.உ.சியின் மேடைப்பேச்சை நேரில் கேட்கும் அரிய வாய்ப்பைப் பெற்ற பலரும் அவருடைய பேச்சாற்றலை-வெளிப்பாட்டுத்திறனை அவரவரின் அனுபவ நிலையில் இருந்து வியந்து பாரட்டியுள்ளனர். விடுதலைப் போராட்ட வீரரும் காந்தியவாதியுமான எஸ்.என். சோமையாஜலு பார்வையில் சொற்பொழிவாளர் வ.உ.சி. பின்வருமாறு வெளிப்படுகிறார்:

> "வ.உ.சி.யின் சொற்பொழிவை அப்படியே எழுதிப் படித்தால் சிறந்த உரைநடையாக அமையும். அவருடைய வாதம் தருக்க நெறியோடு பொருத்தமானதாக இருக்கும். மெல்லிய குரலில் தொடங்கும் அவருடைய பேச்சு போகப்போக வலிமையோடு ஓங்கி ஒலிக்கும்; உணர்ச்சிமயமானதாக மாறும்; இடி முழக்கமாக வெளிப்படும். அவருடைய பேச்சைக் கேட்பவர் யாராக இருந்தாலும் - கற்றவர்கள் ஆயினும் பாமரர்களாயினும் அவர் பேசி முடிக்கும்வரையில் அவ்விடத்தைவிட்டு அகல மாட்டார்கள்; தம்மை மறந்து வ.உ.சி.யின் சொற் பொழிவிலேயே ஆழ்ந்துவிடுவார்கள்" *(R.N. Sampath and Pe.Su. Mani, V.O.Chidambaram Pillai, p.35).*

> "சிதம்பரனாரின் பேச்சுத்தமிழ் ஆழமும் வேகமும் உள்ள ஓர் ஆறு கரைபுரண்டு வெள்ளமிட்டுவரும் அழகை நினைவூட்டும்"

என்பது பி.ஸ்ரீ.யின் வாக்கு (முன் குறிப்பிட்ட நூல், ப.54).

தூத்துக்குடியிலும் திருநெல்வேலி மாவட்டத்திலும் வ.உ.சி. பேச வேண்டும் என்பது மக்களின் பெருவிருப்பாக இருந்தமைக்கும், வ.உ.சி. பேசிய கூட்டங்களுக்கு மக்கள் பெரும் எண்ணிக்கையில் வந்ததற்கும் பி.ஸ்ரீ.குறிப்பிடும் தனித்தன்மை வாய்ந்த- கேட்டாரைப் பிணிக்கும் வ.உ.சி.யின் சொற்பெருக்கே காரணம்.

அச்சம், அறியாமை, வறுமை ஆகியவற்றில் ஆழ்ந்து கிடந்த மக்களைப் போராட்டக் குணம் கொண்டவர்களாகவும் அரசியல் விழிப்புணர்வு பெற்றவர்களாகவும் வ.உ.சி. தம் சொற் பொழிவுகளால் உருவாக்கினார் என்பது வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு நிகழ்வாகும். இதுவே,

> "இந்தியாவின் எதிர்காலம் வழக்கறிஞர்களிடமோ பட்டதாரிகளிடமோ இல்லை. தூத்துக்குடி சிதம்பரனார், பந்தர்பூர் திலகர், வங்கம்தந்த விபின சந்திரபாலர் முதலிய தலைவர்கள் ஆணைப்படி திரண்டெழுந்து, அவர்கள் உதட்டசைவுக்கு உயிரையும் கொடுக்க முன் வருபவர்களின் கையில்தான் இந்தியாவின் எதிர்காலம் இருக்கிறது" *(Political thoughts of Aurobindo, p.18 மேற்கோள்: பெ.சு.மணி, 'ஆங்கிலம் புகுந்தவிதமும் ஆதிக்கம் வளர்ந்த கதையும்', செங்கோல் வார இதழ், 13.6.1965, ப.5)*

என்ற ஆழ்ந்த நம்பிக்கையோடும் நிறைந்த எதிர்பார்ப்பு களோடும் அன்றைய மகத்தான இந்தியத் தலைவர்களில் ஒருவராகப் போற்றப் பெற்ற அரவிந்தரையே எழுதத் தூண்டியிருக்க வேண்டும்.

சென்சு நீதிபதி பின்ஹே 7.7.1908 அன்று தமது தீர்ப்பில் வ.உ.சிக்கு இரட்டை ஆயுள் தண்டனை வழங்கினார். அதற்கான காரணங்களாக முதன்மைப்படுத்தப்பெற்ற வ.உ.சி.யின் சொற்பொழிவுகள் பற்றிய பின்ஹேயின் கருத்துகள் இங்குக் குறிக்கத்தக்கன:

"சிதம்பரம்பிள்ளை தொழில் அபிவிருத்திக்காகப் பாடுபடுவதாகச் சொல்லிக் கொண்டு சுயராஜ்யப் பேற்றை அடைவதற்கான வழிகளை எடுத்துச் சொல்லிப் பிரசங்கித்தார். கோரல் மில் வேலை நிறுத்தத்தை உண்டாக்கியவர் அவரே.

திருநெல்வேலியிலும் தூத்துக்குடியிலும் உள்ள சாமானிய ஜனங்களுக்கு ஓட்டு இல்லை. ஆகையால் ஒருவன் ஜனங்களை நதிமணலில் கூட்டிவைத்துப் பேசக் கனவிலும் நினைக்க மாட்டான். ஏனெனில், தன்னுடைய விருப்பத்தை நிறைவேற்ற அவர்களுக்குச் சக்தியில்லை.

ராஜீயப் பிரசங்கம் செய்வதாக ஒருவன் வெளிவரும் போது ஏன் ஜனங்களைக் கூட்டிப் பேசுகிறான் என்று கவர்ண்மெண்ட் உத்தியோகஸ்தர்கள் கவலைப்படுகிறார்கள்.

அவன் யாரைப் பார்த்துப் பேசுகிறானோ அவர்களுக்குச் சட்டப்படி அமைந்திருக்கும் சக்தி எதையும் உபயோகிப்பதற்கு இல்லை. என்ன எண்ணத்தோடு அவன் கூட்டத்தைப் பார்த்து பேசுகிறான்?

ஜனக்கூட்டத்துக்குள்ள ஒரே சக்தியைப் பிரயோகிக்க வேண்டுமென்றுதான் பேசக்கூடும். அதாவது, ஜனக்கும்பலுக்கும் பிரதி மனிதனுக்கும் உள்ள சரீர பலத்தை உபயோகிக்கும்படி தூண்டித்தான் பேசுகிறான்.

கும்பலைப் பார்த்து, சரீர பலத்தை உபயோகிக்கும்படி பேசுவது மகா அபாயகரமான காரியம். அதனாலேதான் அமைதிக்கும் ஒழுங்குக்கும் பொறுப்பேற்ற உத்தியோகஸ்தர்கள், சாமானிய ஜனங்கள்

கும்பலாய்ச் சேர்ந்திருக்க பிரசங்கங்கள் செய்யப் படும்போது, இயற்கையாக ஜாக்கிரதையுடன் இருந்து சமசயமும் கொள்ளுகிறார்கள்.

அந்நிய வியாபாரத்தை விலக்கு என்று பேசலாம். ஆனால், சாமானிய ஜனக் கும்பலைப் பார்த்து இப்படிப்பட்ட கொள்கைகள் பேசப்படும் பொழுது கேட்கும் ஜனங்கள் அவற்றோடு நிற்பார்களா? கவர்ண்மெண்ட்டை பாய்காட் செய்யவேண்டும் என்றும் சொல்லப்பட்டது. கோர்ட்டுகளை பாய்காட் செய்யும்படி சொல்லப்பட்டது.

இது 124ஏ பிரிவின்கீழ் அபாயகரமான தூரத்துக்குப் போவதாக மாட்டாதா? சட்டத்துக்குக் கீழ்ப்படிந்து நடப்பதற்கு ஒத்ததாகுமா? *(எம். கிருஷ்ணசாமி ஐயர், தொகுப்பாசிரியர், வி.ஓ.சிதம்பரம் பிள்ளை சரித சுருக்கம், பக். 32-34, 36).*

தூத்துக்குடியிலும் திருநெல்வேலியிலும் அந்நாளில் ஏற்பட்ட ஆங்கில எதிர்ப்புணர்விற்கு அடிப்படை வ.உ.சி.யின் சொற்பொழிவுகளே என்ற எண்ணம் நீதிபதி பின்ஹேயின் மனத்தில் ஆழப்பதிந்திருந்ததன் வெளிப்பாடே மேற்கண்ட தீர்ப்பு விவரம். 'சாமானிய' மக்களைச் சிந்திக்கப் பயிற்றுவித்து அரசியல் விழிப்பு பெறச் செய்த வ.உ.சி.யின் தன்னிரகற்ற வெற்றிதான் பின்ஹேயின் பார்வையில் மாபெரும் குற்றமாகத் தென்பட்டது; இரட்டை ஆயுள் தண்டனை வழங்க முதன்மைக் காரணமாக அமைந்தது.

மக்களைத் திரட்டி, குறிப்பாகப் பாமர மக்களை ஒன்று சேர்த்து அவர்களுக்கு அரசியலைப் புரியவைத்தவர் வ.உ.சி. அரசியல் வழியாகச் சிந்திக்கவும் செயல்படவும் பாமர மக்களைப் பயிற்றுவித்தவர் அவர். 'முரசம் போன்ற தம் பேச்சால்' (சுத்தானந்த பாரதியார், 'சோதனையும் சாதனையும்' - இரண்டாவது பாகம்,

ப.45) - சொற்பெருக்கால் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ்நாட்டில், சிறப்பாகத் திருநெல்வேலி மாவட்டத்தில் அரசியல் எழுச்சியை ஏற்படுத்திய பெருமை வ.உ.சி.யின் தனி உடைமை.

தமிழ்நாட்டு வரலாற்றில் தம்முடைய மேடைப் பேச்சாற்றலால் பெரும் மாற்றங்களை - அரசியல், சமுதாய மாற்றங்களை ஏற்படுத்தியவர்கள் வரிசையில் முதலிடம் பெறுபவர் வ.உ.சி. அவருடைய தமிழ்ப் பணிகளுள் முத்திரை பதித்த ஒன்று மேடைப்பேச்சு. அதை முறையாகத் தொடங்கித் திட்டமிட்டு வளர்த்துப் பின்னாளில் அது ஒரு கலையாக - இலக்கிய வகையாகத் தழைப்பதற்கு வித்திட்டவர் வ.உ.சி. என்பது இதுவரையில் கண்ட செய்திகளால் தெளிவாகப் புலனாகும்.

# வ.உ.சி.யும் தனித்தமிழும்

தமிழில் பிறமொழிச் சொற்களின் கலப்புப் பற்றிய வ.உ.சி.யின் கருத்தை அறிய வேண்டுமாயின் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ்நாட்டில் நிலவிவந்த பிறமொழிக் கலப்புப் பற்றிய சிந்தனைகளை - சிறப்பாக, சுப்பிரமணிய சிவம் தொடங்கி வைத்த விவாதத்தை, அதன் பின்னணியை முழுமையாக அறிதல் வேண்டும்.

எனவே, சுப்பிரமணிய சிவம் எழுப்பிய விவாதத்தின் முழு விவரங்களும் இங்குத் தொகுத்துத் தரப்பெற்றுள்ளன. இதன் அடிப்படையில் வ.உ.சி.யின் தனித்தமிழ் நடைபற்றிய சிந்தனைகள் விளக்கம்பெறும். சிவம் தொடங்கி நடத்திய தனித்தமிழ் இயக்கத்தின் வரலாறு:

சிவம் அந்நாளைய (1915) சுதேசமித்திரனின் தமிழ் நடையைப் பற்றித் தெரிவித்த கருத்து, தமிழ் நடை எப்படி அமையவேண்டும் என்பதைப் பற்றியதொரு விவாதத்தையே தோற்றுவித்தது. வரலாற்றுச் சிறப்புமிக்க அந்த விவாதத்தின் பின்னணியை அறிவது அவசியமாகும்.

> "சென்ற சில வருஷங்களாக நாம் சுதேச மித்திரனைக் கவனித்து வருகிறோம். அதன் பாஷா நடையையும் நோக்கங்களின்

போக்கையும் பற்றிப் பல தடவைகளிலும் மிகமிக வருந்தியிருக்கின்றோம்'' *('நாமும் சுதேசமித்திரனும்'; ஞானபானு - திங்கள் இதழ், நவம்பர், 1915, ப.198).*

இதுவே, சுதேசமித்திரனின் தமிழ்நடையைக் கண்டித்துச் சிவம் நடத்திய இயக்கத்தின் தொடக்கமாகும். சுதேசமித்திரனின் தமிழ் நடையைப் பற்றிய இவருடைய வருத்தம் படிப்படியாக வளர்ந்து 7.5.1915-இல் லோகோபகாரி என்னும் வார இதழில் கடிதமாக வெளிப்பட்டது. ஆனால், சுதேசமித்திரன் அதைப் பொருட்படுத்தவில்லை. சிவம் பிற இதழ்களின் ஆசிரியர்களிடத்தில் இது பற்றிப் பேசினார், அவர்களில் பலர் சுதேசமித்திரனைக் கண்டித்து எழுதத் தயங்கினர் ('நாமும் சுதேசமித்திரனும்', ப. 199).

இதை அடுத்து ஞானபாநு சூலை இதழில் (1915) தனித்தமிழில் எழுதுவோர்க்கு 'இனாம் ரூபா ஐந்து' என்னும் விளம்பரத்தைச் சிவம் வெளியிட்டார்.

மேற்படி விளம்பரத்தை அந்நாளில் தமிழ்நாட்டில் வெளிவந்த பிற இதழ்களுக்கும் அனுப்பி வெளியிடுமாறு சிவம் கேட்டுக் கொண்டார். சில இதழ்கள் வெளியிட்டன (ஞானபாநு, செப்டம்பர், 1915, ப. 163). சுதேசமித்திரனோ கட்டணமின்றி வெளியிட மறுத்துவிட்டது (மேலது., பக். 163-164). சிவம் சிங்கமானார். "தமிழ் ஜனங்களுக்கு சுதேசமித்திரன் அறிவைப் பரப்புகின்றதா? அல்லது ஆங்கிலப் பாஷையைப் பரப்புகின்றதா?" என்ற கேள்வியை எழுப்பினார். தொடர்ந்து சுதேசமித்திரனின் தாய்மொழிப் பற்றின்மையைக் கண்டனம் செய்தார்.

'பாரத புத்ரன்' என்பவர் சுதேசமித்திரனின் வாரம் மும்முறை இதழில் (1915-இல் சுதேசமித்திரன் நாளிதழாகவும் வாரம் மும்முறையாகவும் வெளிவந்தது) சிவத்தின் கண்டனத்திற்கு மறுப்பு எழுதினார். அது, அக்டோபர் 1915-இல் 1, 6, 15 ஆகிய தேதிகளில் மூன்று கட்டுரைகளாக (நிருபங்களாக) வெளிவந்தது. அவற்றில் 1.10.1915-இல் வெளிவந்த, 'தமிழ் பாஷையும்

சுதேசமித்திரனும்' என்ற கட்டுரையை மறுத்து வ.உ.சி. ஒரு கட்டுரை எழுதினார். அக்கட்டுரை 29-10-1915-இல் சுதேசமித்திரனில் வெளிவந்தது (ஞானபாநு, நவம்பர், 1915, ப. 216). நாளிதழிலா, வாரம் மும்முறை இதழிலா என்பது அறியுமாறு இல்லை.

29.10.1915-இல் வ.உ.சி. மறுப்பு எழுதியதைப் போலவே சிவமும் 'நாமும் சுதேசமித்திரனும்' என்ற தலைப்பில் விரிவானதொரு கட்டுரையை எழுதித் தம் எண்ணங்களை வெளியிட்டார் (ஞானபாநு - நவம்பர், 1915). அத்துடன் அந்த விவாதம் முடிந்துவிடவில்லை. 9.11.1915 சுதேசமித்திரனில், 'பாரத புத்ரன்' நீண்டதொரு கட்டுரையை எழுதி வ.உ.சி., சிவம் ஆகிய இருவர் கருத்துகளுக்கும் விடை அளித்தார். இதைப் பற்றிச் சிவம் கூறியுள்ளது இங்குச் சுட்டத்தக்கதாகும்.

> "ஸ்ரீமான் சிதம்பரம் பிள்ளையவர்களின் மறுப்பை சுதேசமித்திரன் கம்பீரபுத்தியுடன் அங்கீகரித்து ஒப்புக் கொண்டு தன்னைச் சீர்திருத்திக் கொள்ளும் என்று நினைத்தோம். ஸ்ரீமான் சிதம்பரம்பிள்ளையவர்களுடைய மறுப்பைப் பற்றியுள்ள 'பாரத புத்ர'னுடைய கண்டனத்திற்கேற்ற மறுமொழி கொடுப்பதற்கு ஸ்ரீமான் பிள்ளையவர்களே தகுந்தவராதலால் அவ்விஷயத்தைப் பற்றி நாம் ஒன்றும் பேசப் புகவில்லை. நம்மைப் பற்றியுள்ள குறிப்புகளைப் பற்றி இங்கு எழுதுவதற்கு நமக்கு இப்பொழுது இடம் போதாதாதலால் அடுத்த பத்திரிகையில் கவனிப்போம்" (ஞானபாநு, நவம்பர், 1915, ப. 216).

ஆயின், வ.உ.சி.யோ, சிவமோ இதற்குப் பிறகு 'பாரத புத்ர'னுக்கு மறுப்பு எழுதியதாகத் தெரியவில்லை. மாறாக, ஞானபாநு டிசம்பர் (1915) இதழில்,

> "பேசுபவர்கட்கெல்லாம் பதில் கூறுவதற்கு நாம் இங்கு இல்லை, நமக்கு எப்பொழுதும்

*காரியத்தினிடத்திலேயே கண். 'பாரதபுத்ரன்' என்ன வேண்டுமோ சொல்லிக் கொண்டு போகட்டும். சுதேசமித்திரனுடைய நடை இப்பொழுது சீர்திருத்தமடைந்து வருவதை நோக்க நாம் சந்தோஷிக்கிறோம். அப்பத்திரிகையின் புதிய பத்திராதிபர் நமது வார்த்தைகளை அன்புடன் ஏற்றுக் கொண்டிருக்கிறாரென்று ஊகிக்கிறோம். ஆங்கிலச் சொற்கள் ( ) இத்தகைய அடைப்புக் குறிகளுக்குள்ளும் அவற்றிற்குச் சரியான தமிழ்ச் சொற்கள் சாதாரணமாகவும் உபயோகிக்கப் படுகின்றன. இவ்விஷயத்தில் இன்னும் சிறிது சிரமம் எடுத்துக் கொள்ளுமாறு நாம் சுதேசமித்திரன் பத்திராதிபரை மிகமிக வேண்டிக் கொள்கிறோம்" (மேலது, ப. 240)*

என்னும் குறிப்பைக் காணமுடிகிறது.

சுதேசமித்திரனின் தமிழ்நடையை முன்வைத்துச் சிவம் தொடங்கிய தனித்தமிழ் பற்றிய விவாதம் - இயக்கம் மே 1915-இல் தொடங்கி, டிசம்பர் 1915-இல் நிறைவுற்றது. இதில், ஞானபாநுவும் சுதேசமித்திரனும் மட்டுமே கலந்து கொண்டன. லோகோபகாரி சிவத்தின் கடிதத்தை வெளியிட்டதோடு நின்றது. இதில் நேரடியாகப் பங்கு கொண்டவர்கள் சிவம், வ.உ.சி., 'பாரதபுத்ரன்' ஆகிய மூவரேயாவர். இவர்களுடன் ல.சு. சுப்பராய அய்யர் என்னும் ஆர்வலரும் 'விசுவாமித்ரர்' என்னும் புனைபெயரினரும் சார்பாளர்களாக - சிவம், வ.உ.சி.யைச் சார்ந்தும் கலந்து கொண்டனர்.

ஞானபாநு சூலை (1915) இதழில் சிவம் வெளியிட்ட 'இனாம் ரூபா ஐந்து' என்னும் விளம்பரம் 'தனித்தமிழ்' பற்றிய புதிய கண்ணோட்டம் உருவாகக் காரணமாக அமைந்தது. அந்தப் புதிய கருத்துருவாக்கத்தில் வ.உ.சி.க்கும் நிறைவான பங்கு அமைந்தது. தனித் தமிழில் எழுத வேண்டும் என்ற எண்ணத்தைப்

பரவலாக விதைத்தவர் என்ற வகையில் சிவமும், தனித்தமிழில் எழுத முடியும் என்ற நம்பிக்கையை வளர்த்த வகையில் வ.உ.சி.யும் தனித்தமிழ் இயக்க வரலாற்றில் மறக்க முடியாதவர்களாகின்றனர். பின்வரும் செய்திகள் இக்கருத்தின் உண்மையைப் புலப்படுத்தும் தன்மையன.

## வ.உ.சி.யும் தனித்தமிழும்

'தமிழ்ப் பாஷையும் சுதேசமித்திரனும்' என்னும் தலைப்பில் 'பாரதபுத்ரன்' எழுதிய முதல் கட்டுரை (1.10.1915) தனித்தமிழ் இயக்க வரலாற்றில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கதொன்றதாகும்.

> "தமிழ் இலக்கியங்களிலெல்லாம் தலைமை வாய்ந்துள்ள திருக்குறளிலுங்கூட சுத்தம் சமஸ்கிருதச் சொற்கள் 50க்கும் மேலிருக்க, இருபதாம் நூற்றாண்டில் இருக்கும் நம்மால் தனித்தமிழில் லௌகிக சம்பந்தமாயாவது வைதிக சம்பந்தமாயாவது ஒரு பத்திரிகையை நடத்த முடியும் என்பது கனவிலும் கருதவொண்ணா விஷயமாம்"

என்று தொடங்கும் அந்தக் கட்டுரை பலத்த எதிர்ப்பை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அக்கட்டுரையை மறுத்து வ.உ.சி. எழுதியுள்ள 'தமிழ்' என்னும் கட்டுரையில் (29.10.1915) தனித்தமிழ் பற்றிய அவர்தம் கருத்துகள் பலவற்றைக் காணமுடிகின்றது. அவற்றை அறியும் முன் நினைவிற் கொள்ள வேண்டிய இன்றியமையாத குறிப்பு ஒன்று உண்டு.

வ.உ.சி. இருபதாம் நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகளில் விடுதலைப் போராட்டத்தில் முனைப்பாகத் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர். விடுதலைப் போராட்டத்தை மக்கள் இயக்கமாக நடத்திக் காட்டிய முதல் தமிழ் நாட்டு அரசியல் தலைவர் வ.உ.சி. என்பது இங்கு நினைவுகூரத்தக்கது. எதுவும் மக்களைச் சென்றடையவேண்டும், அவர்களுக்குப் பயன்பட வேண்டும் என்பது அவருடைய கொள்கையாகும். அரசியல் மட்டுமன்றி

இலக்கியம், மொழி சார்ந்த செய்திகளும் மக்களுக்குப் புரியும் நிலையில், பயன்படும் வகையில் அமைய வேண்டும் என்று கருதியவர் வ.உ.சி. இதை 'மனம்போல வாழ்வு' என்னும் தம்முடைய மொழிபெயர்ப்பு நூலுக்கு இவர் எழுதியுள்ள நூன்முகத்திலிருந்து அறியலாம் (மனம்போல வாழ்வு, முதற்பதிப்பு, நூன்முகம், ப. 5). இவருடைய இந்த மனப்போக்கே தனித்தமிழ் பற்றிய மாறுபட்ட கருத்துருவாக்கத்திற்கு - வடமொழி கலந்த தமிழ் நடையைத் தனித்தமிழ் நடை என்று இவர் ஏற்றுக் கொண்டதற்கு அடிப்படையாக அமைந்தது. இந்தப் பின்னணியில் 'தமிழ்' என்னும் கட்டுரையின் கருத்துகளைப் புரிந்து கொள்வது வ.உ.சி.யை உரியவாறு மதிப்பீடு செய்வதற்குத் துணை செய்யும்.

தமிழில் பிறமொழிச் சொற்களை - வடமொழி நீங்கலான பிறமொழிச் சொற்களை - குறிப்பாக ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்தக் கூடாது என்பதுதான் சிவம் தொடங்கி வைத்த விவாதமாகும். இந்த விவாதத்தில் ஞானபாநுவின் சார்பில் பங்குகொண்ட நிலையில்தான் வ.உ.சி. தம்முடைய கருத்துகளை முன்வைத்தார். தமிழில் ஆங்கிலச் சொற்களைக் கலத்தல் கூடாது என்பதில் சிவத்தோடு ஒத்த கருத்துடையவராகவே வ.உ.சி. விளங்கினார்.

"பிற பாஷைச் சொற்கள் நாளாவட்டத்தில் தமிழ்ப் பதங்களாய்விடுமாறு நாம் இடங்கொடுத்தல் நன்றன்று. ஏனெனில், அவை தமிழ்ப் பதங்களானபின் அவற்றை நம் தமிழ் அகராதியிலும் இலக்கணத்திலும் சேர்த்துப் பொருள் உரைக்கவும் இலக்கணம் கூறவும் நேரிடும்" (தமிழ், குமரிமலர், ஜூலை, 1968, ப. 24; 29.10.1915-இல் சுதேசமித்திரனில் வெளிவந்த இக்கட்டுரை குமரிமலரில் ஏ.கே. செட்டியாரால் மறுவெளியீடு செய்யப்பட்டது).

"ஒவ்வொரு பாஷையாளரும் தத்தம் பாஷையில் பிற பாஷைச் சொற்களை வரையறையின்றிச் சேர்த்துக் கொண்டே போவாராயின் நாளடைவில் உலகத்தின்கண் நிலவும் எல்லாப் பாஷைச் சொற்களும் ஒவ்வொரு பாஷையகராதியிலும்

இலக்கணத்திலும் நுழைந்து அவற்றைக் கற்பது அசாத்தியமாக முடியும்" (மேலது).

"தமிழில் சொற்களுக்குக் குறைவில்லை; ஆதலால், ஆங்கிலேயர் பிற பாஷைச் சொற்களைத் தமது பாஷையிற் சேர்த்துக் கொண்டதுபோல நாம் பிற பாஷைச் சொற்களை நமது தமிழ்ப் பாஷையிற் சேர்க்க வேண்டிய அவசியமில்லை" (மேலது ப. 26). ஆதலின், தமிழில் ஆங்கிலச் சொற்களைக் கலப்பதைத் தவிர்ப்போம் என்று குரல் கொடுக்கிறார் வ.உ.சி.

தமிழில் ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்துவதில் தவறில்லை என்னும் கருத்துடையவரான வி.கோ. சூரிய நாராயண சாத்திரியார் பற்றிப் 'பாரதபுத்ரன்' தம்முடைய கட்டுரையில் குறித்துள்ளதாக ஊகிக்க முடிகிறது. அவருடைய கட்டுரை பார்வைக்குக் கிடைக்காததால், வ.உ.சி. தரும் குறிப்பைக் கொண்டே இதை உய்த்துணர வேண்டியுள்ளது.

> "பதினோராம் உறுப்பு, இறந்துபோன ஒரு தமிழபிமானியின் செயலைப் பற்றிக் கூறுகின்றது. பொதுவாக, இறந்துபோன மனிதர்களைப் பற்றி உயர்வாகக் கூறுவதைத் தவிர வேறு ஒன்றையும் கூறாது விடுதலே உத்தமம். ஆனால், அத் தமிழபிமானி தம் பெயரைத் தமிழ்ச் சொற்களால் ஆக்க நினைத்த செயலோ என் போன்றோரால் மிகப் பாராட்டத்தக்கது" (மேலது, ப. 30).

'பதினோராம் உறுப்பு இறந்துபோன ஒரு தமிழபிமானியின் செயலைப் பற்றிக் கூறுகின்றது' என்று கூறும் வ.உ.சி. எந்தச் செயலை என்று குறிப்பிடவில்லை. இறந்துபோன ஒருவரைப் பற்றி வேறுவிதமாகக் கருத்துத் தெரிவிக்க விரும்பாத வ.உ.சி. அத்துடன் தம் கட்டுரையை நிறுத்திவிடாமல், 'அத்தமிழபிமானி' தம் பெயரைத் தமிழாக்கிக் கொண்டதைப் பாராட்டியுள்ளமை ஓர் அரிய வரலாற்றுக் குறிப்பை நினைவுகூர்தற்கு வாய்ப்பாக அமைந்துள்ளது.

தம் பெயரைத் தமிழாக்கிக் கொண்ட தமிழறிஞர் வி.கோ.சூ. என்பது தமிழ் ஆய்வுலகம் நன்கறிந்த ஒன்றாகும். 'சூரிய நாராயண சாஸ்திரி' என்னும் தம் பெயரைப் 'பரிதிமாற் கலைஞர்' என்று மாற்றி வைத்துக் கொண்டவர் அவர்.

> "ஆங்கிலக் கவிதை அமைப்பாகிய சானெட் **(Sonnet)** என்பதைப் பின்பற்றித் தமிழில் அவர் இயற்றிய சில கவிதைகள் 'தனிப்பாசுரங்கள்' என்ற பெயரில் 'ஞானபோதினி' என்னும் திங்கள் இதழில் வெளிவந்தன. அவற்றை வெளியிடுவதற்குத் தம்முடைய பெயரின் தமிழ் மொழிபெயர்ப்பான 'பரிதிமாற் கலைஞன்' என்பதைப் பயன்படுத்தினார். பின்னர் அதுவே அவருக்கும் நிலைத்தது" *(ந. சுப்பிரமணியன், வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், ப. 87).*

'பாரத புத்ரன்' குறிப்பிடும் தமிழபிமானி வி.கோ.சூ. என்பதை உணர இதுவே தக்க சான்றாகும். இனி, இவர் குறிப்பிடும் வி.கோ.சூ.வின் செயல் யாது என்பதை அறிய முயலலாம்.

சுதேசமித்திரன், தன் நடையில் ஆங்கிலத்தை மிகுதியாகப் பயன்படுத்துவதில் பிழையில்லை என்று வாதிப்பதற்காகப் 'பாரத புத்ரன்' எழுதிய கட்டுரை அது. அதில் தமிழில் ஆங்கிலம் கலந்து எழுதுவது தவறாகாது என்பாரது கருத்துகளைத் தமக்குச் சார்பாகப் பயன்படுத்துவது இயல்பு. அந்த இயல்பின்படியே வி.கோ.சூ.வைப் 'பாரதபுத்ரன்' பயன்படுத்தியுள்ளார் என்று கருதலாம்.

> "ஆங்கிலச் சொற்கள் தமிழ்ப் பாஷையிற் புகுதலும் இயற்கையே. இதனைத் தடுக்க முடியாது; தடுக்கப் புகுதலும் தக்கதன்றாம்; அவ்வாறு தடுக்கப் புகினும் அது வீண் முயற்சியாய் முடியுமேயன்றி வேறில்லை. சுதேச மித்திரன் போன்ற பத்திரிகைகள் ஆங்கிலச் சொற்கள் சிலவற்றைத் தமிழின்கண் ஏற்றப்

புகுந்தன.............................. அவர் செயல் மிகவும் நேரிதே.

சிலர் ஆங்கிலக் கருத்துகளுக்கு ஏற்ற சொற்கள் தமிழ் மொழியிற் காண்டல் அரிதாயின், வடசொற்களின் மூலமாக அவற்றைத் தமிழில் வெளியிடுகின்றனர். இவ்வளவு தூரஞ் சுற்றுவானேன். ஆங்கிலச் சொற்களையும் திசைச் சொற்களாக மேற்கொண்டால் என்ன? மேற்கும் ஒரு திசையன்றோ?" *(வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரியார், தமிழ் மொழியின் வரலாறு, பக். 135-137).*

இவை, வி.கோ.சூ.வின் கருத்துகள்; தமிழில் ஆங்கிலம் கலந்து எழுதுவதை வரவேற்கும் வரிகள். தம் வாதத்திற்கு பொருந்துவனவாக அமைந்துள்ள இக்கருத்துகளைத் தெரிவித்த வி.கோ.சூ.வை முன்னிலைப்படுத்தித் தம் வாதத்திற்கு வலிமை சேர்க்கப் 'பாரதபுத்ரன்' முயன்றிருக்கலாம். அந்தச் செய்தியே அவருடைய கட்டுரையின் பதினோராம் உறுப்பின் பத்தியில் இடம் பெற்றிருக்க வேண்டும்.

தமிழில் ஆங்கிலம் கலந்து எழுதுவதில் உடன்பாடு இல்லாதவரான வ.உ.சி.யால் வி.கோ.சூ.வின் கருத்தை ஏற்க முடியவில்லை. அதே நேரத்தில் அமரரான வி.கோ.சூ.வின் கருத்து பற்றி விவாதிக்கவும் அவர் விரும்பவில்லை. தமக்கு ஒவ்வாத கருத்தை ஏற்காத வ.உ.சி. வி.கோ.சூ. வின் பெயர் மாற்றத்தைப் பாராட்டவும் தயங்கவில்லை. தமக்குச் சரியென்று தோன்றியதை ஒளியாமல் உரைக்கும் பேராண்மை வ.உ.சி.யின் பெரும்பண்பாக இருந்தமையை இதன்மூலம் அறியமுடியும். அத்துடன் தமிழில் ஆங்கிலம் கலத்தலில் பிழையில்லை என்னும் சிந்தனை இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே இருந்தது என்னும் வரலாற்று உண்மையையும் உணர்த்துவதாய் இப்பகுதி அமைந்துள்ளது. தமிழில் ஆங்கிலம் கலந்து எழுதுவதை எதிர்த்த வ.உ.சி. வடமொழி கலப்பதைப் பெரும்பிழையாக எண்ணவில்லை.

"நம்மவர்கள் அறிவதற்கு இன்றியமையாத அளவு தமிழ் பாஷையில் சமஸ்கிருதச் சொற்களைக் கலந்து பத்திரிகை நடாத்துவதும் நூல்கள் எழுதுவதும் தவறில்லை" (தமிழ், குமரிமலர், சூலை, 1968, ப. 23) என்று எழுதினார் வ.உ.சி. "இன்றியமையாத அளவு' வடசொற்களைக் கலந்து எழுதுவதில் பிழையில்லை என்னும் கருத்து நீண்டகாலமாகவே வ.உ.சி.யின் மனத்தில் நிலைத்திருந்த ஒன்றாகும். அப்படி அவர் எண்ணியதற்குக் காரணம் உண்டு.

> "இந்நூலின் அரிய பொருள்களைத் தமிழுலகம் நன்குணர்ந்து கைக்கொண்டொழுகுதல் வேண்டும் என்ற எண்ணமே என் மனத்தின்கண் முற்பட்டு நின்றமையின் பயில வழங்கும் வடமொழிகளை இதில் மிகுதியாகத் தொடுத்திருக்கிறேன்"

என்று கூறியதன் மூலம் தமிழில் வடமொழியைக் கலந்து எழுதுவதைத் தாம் ஏற்றுக் கொண்டமைக்கான காரணத்தைத் தெளிவுபடுத்துகின்றார். 'மனம் போல வாழ்வு' என்னும் தம்முடைய நூலின் நூன் முகத்தில் (1909) வ.உ.சி. மேற்கண்டவாறு குறித்துள்ளார்.

வ.உ.சி. வாழ்ந்த காலச்சூழல் ஈண்டு எண்ணத்தக்கதாகும். வடமொழி, எழுத்திலும் பேச்சிலும் பெருவழக்காக இருந்த காலம் அது. வடசொற்களைக் கலந்து பேசுவதும் எழுதுவதும் பெருமையாகக் கருதப்பட்ட காலம் அது. அந்தக் காலச் சூழலில் வாழ்ந்த வ.உ.சி.யும் வடமொழி கலந்த தமிழ்நடையை ஏற்றுப் பயன்படுத்தியமை சூழ்நிலையின் காரணமாகத் தவிர்க்க இயலாத ஒன்றாயது. ஆயின், வடமொழி கலந்து எழுதிய பிறருக்கும் வ.உ.சி.க்கும் வேறுபாடு இருந்தது.

> "தமிழ் நூல் யாப்பவர் திசை வடசொற்களை இயைபும் இடனும் அளவும் அறிந்து வழங்குவாராயின், அவர் வாக்கு வளமும் இன்பமும் தருவதாகும்; பாகமும் செம்பாகமாக

> இருக்கும்" *(தி. செல்வக்கேசவராயர், தமிழ். ப. 25).*

என்று வடமொழிக் கலப்பைப் பெரிதும் வற்புறுத்தி எழுதுவார் திருமணம் செல்வக்கேசவராயர். மகிழ்ச்சியும் இன்பமும் கிடைக்கும் ஆதலின் வடமொழி கலந்த தமிழ் நடையைப் பயன்படுத்துக என்கிறார் செல்வக்கேசவராயர். ஆயின், வ.உ.சி.யோ தாம் கூறும் செய்திகள் மக்களுக்குச் சென்று சேரவேண்டும் என்பதற்காகப் 'பயில வழங்கும் வடசொற்களை' நம்மவர் அறிவதற்கு இன்றியமையாத அளவு பயன்படுத்தியுள்ளதாகக் குறித்துள்ளார். மொழிக்கு அழகு சேர்க்கும் அதனால் பயன்படுத்துக என்பதற்கும், படிப்பவருக்குப் புரியவேண்டும் அதற்காகப் பயன்படுத்துகின்றேன் என்பதற்கும் இடையேயுள்ள வேறுபாடு - அதன் நுட்பம் உணரத்தக்கதாகும்.

வ.உ.சி. தவிர்க்க இயலாத் தேவை காரணமாக வடசொற்களைக் கலந்து எழுதினார் என்றாலும் இவருக்குத் தனித்தமிழ் ஆர்வமும் மிக்கிருந்தது. தனித்தமிழில் எழுதவேண்டும் என்பதே இவருடைய எண்ணமாக இருந்தது. அதனால்தான் 1909-இல் பயில வழங்கும் வடசொற்களைப் பயன்படுத்துவதற்கான காரணத்தைக் கூறியபோதும் மனம் நிறைவடையாத வ.உ.சி., வடசொற்களைப் பயன்படுத்தியமைக்காக 'அறிவுடையார் என்னை மன்னிப்பாராக" என்று கேட்டுக் கொள்கிறார் (நூன்முகம், மனம் போல வாழ்வு, ப. 5).

1915-இல் வடசொற்களைத் தமிழிலிருந்து அடியோடு களைவதற்கான வழிமுறைகளை விளக்குகிறார்.

> சமஸ்கிருதச் சொற்களை உபயோகிக்க நேரும் இடங்களில், அவற்றின் தமிழ்மொழிபெயர்ப்புச் சொற்களையும் அவற்றின் பக்கங்களில் அவற்றிற்குரிய சமஸ்கிருதச் சொற்களையும் உபயோகித்து தற்காலம் நம் தமிழ்நாட்டில் வழங்கி வரும் சமஸ்கிருதச் சொற்களுக்கெல்லாம் சரியான தமிழ்ச் சொற்களை நம் தமிழ் மக்களுக்குக்

> கற்பித்து நாளடைவில் சமஸ்கிருதச் சொற்களைத் தமிழிலிருந்து வேரோடு களைந்து விடலாம் *(தமிழ், குமரிமலர், சூலை, 1968, பக். 28-29)*

என்பது வ.உ.சி.யின் வாக்கு. இவர் எழுதி வெளியிட்ட 'மனம் போல வாழ்வு', 'அகமே புறம்', 'வலிமைக்கு மார்க்கம்', 'சாந்திக்கு மார்க்கம்' ஆகிய மொழிபெயர்ப்பு நூல்களில் பல புதிய சொல்லாக்கங்களைத் தந்துள்ளார். தனித்தமிழில் எழுத முடியும், எழுத வேண்டும் என்பதே இவருடைய நம்பிக்கையாகவும் விருப்பமாகவும் இருந்தது என்பதை இவை உணர்த்தவல்லன. "தமிழ் ஏனை வடதிசைச் சொற்களை முற்றுங்களைந்துவிட்டுக் காரியம் நடத்தலாகாதோ? தமிழ்மொழிவல்ல நாவலரும் பாவலரும் இங்ஙனே செய்ய விரும்பினால், இது செய்யக் கூடாத காரியமன்று. இது செய்யக்கூடுமாயினும், இதனை ஒருதலையாகக் கொண்டு செய்வது தகுதியன்று என்பது நாம் அறிந்தபடி" (தி. செல்வக்கேசவராயர், தமிழ், ப. 24) என்று கருதியவர்களின் நடுவே, வடசொற்களைக் கலந்து எழுதியதற்கு மன்னிப்பு வேண்டிய வ.உ.சி. தனித்துத் தோற்றமளிக்கின்றார். தனித்தமிழ் சார்ந்த தம்முடைய எண்ணங்களாலும் செயல்களாலும் தனித் தமிழ் வரலாற்றில் இடம்பெறுகிறார்.

# வ.உ.சி.யின் இதழியல் அனுபவங்கள் - சில சிந்தனைகள்

வ.உ.சி.யின் இதழியல் தொடர்புகள் பற்றிப் பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. ஒருவர் கூறியதை அப்படியே அடுத்தவர் கூறுவது என்ற நிலையில்தான் பெரும்பாலான கருத்துகள் அமைந்துள்ளன.

வ.உ.சி. இதழ்கள் சில நடத்தினார் என்று சிலரும், சில இதழ்களுக்கு ஆசிரியராக இருந்தார் என்று சிலரும், சில இதழ்களை நடத்தியதோடு அவற்றின் ஆசிரியராகவும் இருந்தார் என்று சிலரும் கருதுகின்றனர்.

இக்கருத்துகளின் வன்மை மென்மைகள் இங்கு ஆராயப் பெறுகின்றன.

விவேகபாநு, இந்துநேசன் ஆகிய இதழ்கள் வ.உ.சி.யோடு தொடர்புடையனவாகக் குறிக்கப்பெறுகின்றன. இவற்றில் விவேகபாநு பற்றிய செய்திகள் தனியாகவும், இந்துநேசன் பற்றிய செய்திகள் தனியாகவும் அறிதற்குரியன.

## வ.உ.சி.யும் விவேகபாநுவும்

வ.உ.சி. விவேகபாநுவின் ஆசிரியராக இருந்தார். அதை நடத்தினார். மக்களுக்கு நாட்டுப்பற்றை ஊட்டவே விவேகபாநு தொடங்கப்பெற்றது முதலிய கருத்துகள் நிலவுகின்றன.

அத்துடன் விவேகபாநு எங்கிருந்து வெளிவந்தது என்பதிலும், அது தொடங்கப் பெற்ற ஆண்டு குறித்தும் மாறுபட்ட கருத்துகள் உள்ளன. அவற்றை மதிப்பிடுவதும் முடிவு காண்பதுமே இப்பகுதியின் நோக்கம்.

## வ.உ.சி. விவேகபாநுவின் ஆசிரியர்?

விவேகபாநு என்பது இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வெளிவந்த ஒரு தமிழ்த் திங்கள் இதழ். வ.உ.சி. இதன் ஆசிரியராக இருந்தார் என்று பலர் குறித்துள்ளனர். இச்செய்தியின் உண்மையை அறிய வேண்டுமாயின், விவேகபாநுவின் தொடக்ககால வரலாற்றை அறியவேண்டும்.

விவேகபாநு* என்னும் சர்ச்சைக்குரிய இதழ் 1900 செப்டம்பரில் தொடங்கப்பட்டது. 1901 ஆகஸ்டு முடிய ஓர் ஆண்டு குற்றாலத்திலிருந்தும் தூத்துக்குடியிலிருந்தும் வெளிவந்தது. அந்த ஓராண்டில் அது இரண்டு ஆசிரியர்களைக் கண்டது. ஒருவர் கணபதியானந்த சுவாமிகள். கணபதியானந்த சுவாமிகள் விவேகபாநுவின் ஆசிரியராக இருந்தார் என்ற செய்தியை விவேகபாநுவில் (அவர் ஆசிரியராக இருந்த முதல் ஆறு இதழ்களில்) காணமுடியவில்லை. ஏப்பிரல் 1901இதழில் அவ்விதழின் ஆசிரியராகப் பொறுப்பேற்றுக் கொண்டவரான சுவாமி வள்ளிநாயகம் தரும் குறிப்பிலிருந்தும் (நமது பத்திரிகை வால்யூம் 1, புத்தகம் 8, ஏப்பிரல் 1901) முதல் தொகுதியின் இறுதியில் தரப்பெற்றுள்ள குறிப்பிலிருந்துமே (இப் பத்திரிகையானது முதலாறு மாதம் ஸ்ரீ கணபதியானந்த சுவாமிகளால் நடைபெற்று வந்தது - விஷயதானஞ் செய்துதவியோர் பெயர் என்ற பகுதியில் உள்ளது) அறிய முடிகிறது. இன்னொருவர் சுவாமி வள்ளிநாயகம். கணபதியானந்தசுவாமிகள் முதல் ஆறு இதழ்களுக்கு

---

* 1905இல் வெளிவந்தது என்பார் மு. சண்முகம்பிள்ளை, (வ.உ.சி. வாழ்க்கைக் குறிப்பு, தமிழாய்வு 1972, ப. 184) 1901 முதல் விவேகபாநு மாத இதழாக வெளிவந்தது. (பெ.சு. மணி, இராமகிருஷ்ணர் இயக்கமும் தமிழ்நாடும், ப. 399). இவர்தம் கூற்றுகள் தவறானவை என்பதை விவேகபாநுவின் முதல் இதழ் (செப்டம்பர் 1900) உணர்த்தும்.

ஆசிரியராகவும் சுவாமி வள்ளிநாயகம் பின் ஆறு இதழ்களுக்கு ஆசிரியராகவும் இருந்தனர். சென்ற மார்ச்சு மாதம் வரை இவ்வரிய பத்திரிகையை நடத்தி வந்த ஸ்ரீ கணபதியானந்த சுவாமிகள் என்பார் தற்பொழுது பலவிடங்களிலுள்ள சிஷியர்களின் பிரார்த்தனைக்கிணங்க அவரவர் வசிக்கும் ஸ்தலங்களுக்கு விஜயம் செய்யும் கருத்துக் கொண்டவராதலின், இப்பத்திரிகையின் போஷகராயுள்ளார். அறிவில் சிறியேனாகிய என்னை அப்பெரியோர் இறக்கிய பாரத்தை வகிக்கச் சொல்ல, ஒருவாறு துணிந்து அவரது வேண்டுகோளுக்கிணங்கலாயினேன்; விவேகபாநு, நமது பத்திரிகை, வால்யூம் 1, புத்தகம் 8, ப. 171).

ஓராண்டுக்கு மேல் இதழை நடத்த அதன் 'போஷகர்களால் இயலாததால் இரண்டாம் ஆண்டிலிருந்து அதன் ஆசிரியரும் உரிமையாளரும் மாறுகின்றனர். தூத்துக்குடியிலிருந்தும் குற்றாலத்திலிருந்தும் வெளிவந்து கொண்டிருந்த விவேகபாநு, மதுரையிலிருந்து வெளிவரத் தொடங்குகிறது. ஆசிரியர்களில் ஒருவராகவும் உரிமையாளராகவும் மு.ரா. கந்தசாமிக் கவிராயர் பொறுப்பேற்கிறார். மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றிவந்த எஸ். சாமிநாதையரை இன்னொரு ஆசிரியராகச் சேர்த்துக் கொள்கிறார். இருவருமே ஆசிரியர்களாக இருந்து இதழை நடத்தினர். (சிறந்து திகழ்ந்த இதனை இத்தமிழ்நாட்டின் தவக்குறைவால் சிற்சில சௌகரியங்களைக் கருதி வள்ளிநாயகம் சுவாமிகள் சிலகாலம் நிறுத்தி வேறுயாரும் நடத்துவாராயின் இதனது முழு சுதந்திரங்களையும் கொடுத்துத் தாமியன்றவரையுதவி புரிவதாக என்பாலும் எனது நண்பர்கள்பாலுந் தெரிவித்தார்கள். இதனை மீண்டும் நடத்தவேண்டும் என்ற பெருவிருப்பத்தால் இதன் சுதந்திரங்களைப் பெற்றுக் கொண்டு சரிவர நடத்தி வருவதாக மேற்படி சுவாமிகளிடம் நான் தெரிவித்தேன். அவர்கள் அக மகிழ்ந்து ஆசி கூறி, 'விவேகபாநு'வின் சகல சுதந்திரங்களையும் எனக்குக் கொடுத்தருளினார்கள். இங்ஙனமாக இதன் பொறுப்பை யான் வகித்துக் கொண்டு உதவி புரிந்து வருமாறு சேதுபதி ஐஸ் கூல் போதகரும் தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையே இடையறாது கருதி ஊக்கத்துடன் உழைத்து

வருபவரும் ஆத்திச்சூடி விருத்தியுரையெழுதியவரும் ஆகிய ஸ்ரீமான் எஸ். சாமிநாதையரவர்களைக் கேட்டுக் கொண்டேன். அவர்களும் அன்பு கூர்ந்து சம்மதிக்கவே யானும் அவர்களும் ஆகிய இருவருமே பத்திராதிபராகவிருந்து இம்மதுரை மாநகரத்தையே நிலைக்களமாக்கி நாளது டிசம்பர் மாதம் முதல் பத்திரிகை வெளியிடலாகும் - விவேகபாநு, வால்யூம் 2, புத்தகங்கள் 1-2 டிசம்பர், 1902, பக். 1-2). குற்றாலம் விவேகபாநு, 1902 டிசம்பர் முதல் மதுரை விவேகபாநுவாக வெளிவரத் தொடங்கியது (1901 ஆகஸ்டில் முதல் ஆண்டு நிறைவுற்றதும் இதழ் நிறுத்தப் பெறுகிறது; மீண்டும் டிசம்பர், 1902-இல் தான் இதழ் வெளிவருகிறது).

இதுவரை குறித்த செய்திகளிலிருந்து பின்வரும் உண்மைகளை உணரலாம்.

விவேகபாநு என்னும் திங்களிதழ் முதன்முதலில் குற்றாலத்தில் தொடங்கப் பெற்றது.

செப்டம்பர், 1900த்தில் முதல் இதழ் வெளிவந்தது. ஆகஸ்டு 1901 முடிய ஓராண்டு வெளிவந்த அவ்விதழ் முதல் ஆறு மாதங்கள் குற்றாலத்திலிருந்தும் பின் ஆறுமாதங்கள் தூத்துக்குடியிலிருந்தும் வெளிவந்தது. முதல் ஆறு இதழ்களுக்கு (செப்டம்பர், 1900 முதல் பிப்ரவரி 1901 முடிய) கணபதியானந்த சுவாமிகளும் பின் ஆறு இதழ்களுக்கு (மார்ச்சு, 1901 முதல் ஆகஸ்டு, 1901 முடிய) சுவாமி வள்ளிநாயகமும் ஆசிரியராக இருந்தனர்.

பிறகு இதழ் நிறுத்தப் பெறுகிறது. செப்டம்பர், 1901 முதல் நவம்பர், 1902 வரையில் இதழ் வரவில்லை. மீண்டும் டிசம்பர், 1902-இல் இதழ் தொடங்கப் பெறுகிறது.

இம்முறை மதுரையிலிருந்து இதழ் வெளிவருகிறது. ஆசிரியர் பொறுப்பை, எஸ். சாமிநாதையரும் மு.ரா. கந்தசாமிக் கவிராயரும் ஏற்கின்றனர்.

ஆசிரியர் பொறுப்புடன், உரிமையாளராகவும் விளங்கினார் கந்தசாமிக் கவிராயர்.

இந்த அகச்சான்றுகளின் அடிப்படையில், வ.உ.சி. விவேகபாநுவின் ஆசிரியராக இருந்தார் என்பாரின் கூற்றுகள் பொருந்தாமையை உணரலாம். அத்துடன், அவ்விதழ் முதன்முதலில் குற்றாலத்திலிருந்தும் பிறகு, மதுரையிலிருந்தும் வெளிவந்தது என்பதும் அறியப்படும். அது தொடங்கப்பெற்ற ஆண்டு 1900 என்பதும் புலனாகும்.

## விவேகபாநுவை நடத்தியவர் வ.உ.சி.யா?

விவேகபாநுவைத் தொடங்கி நடத்தியவர் வ.உ.சி. என்பது பலர் கருத்து. (எம். கிருஷ்ணசாமி ஐயர் - தொகுப்பாசிரியர், வி.ஓ.சிதம்பரம் பிள்ளை சரித சுருக்கம், பக். 12-13; சிவஞான கிராமணி, கப்பலோட்டிய தமிழன், ப. 6; பரலி சு. நெல்லையப்பர், வ.உ. சிதம்பரம் பிள்ளை சரித்திரம், ப. 9, வ.உ.சி. சுப்பிரமணியம், வ.உ. சிதம்பரம் பிள்ளை கட்டுரைகள் தொகுதி, ப. 36).

வ.உ.சி.யும் தம் சுயசரிதையில், விவேகபாநுவை வெளிவரச் செய்தேன் (இரண்டாம் பதிப்பு, ப. 38) என்று குறிப்பிடுகிறார். 'விவேகபாநு' என்பதற்கு அடிக்குறிப்பில் 'நூலாசிரியர்' நடத்திய தமிழ் மாத சஞ்சிகை' என்ற விளக்கம் தரப்பெற்றுள்ளது. 'விவேக பாநுவை வெளிவரச் செய்தேன்' என்னும் வ.உ.சி.யின் பாடல் அடிக்கு விவேகபாநு என்னும் இதழைத் தொடங்கி நடத்தினேன் என்று பொருள் கொள்ளலாமா என்பது ஆராயத்தக்கது.

வ.உ.சி. நடத்தியதாகக் கூறப்படும் 'விவேகபாநு' இதழில் எந்த இடத்திலும் அதன் உரிமையாளர் என்ற வகையில் வ.உ.சி.யின் பெயர் இடம்பெறவில்லை. மாறாக, அவ்விதழின் இரண்டாவது தொகுதியிலிருந்து மு.ரா. கந்தசாமிக் கவிராயர் உரிமையாளராக இருந்தார் என்பதை இரண்டாம் தொகுதியின் முதல் இதழில் அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பு என்னும் கட்டுரையில் இருந்து அறிய முடிகிறது. இரண்டாவது தொகுதியிலிருந்து இதழின் உரிமையாளராக மு.ரா. கந்தசாமிக் கவிராயரின் பெயர்

காணப்படுவதால் வ.உ.சி. உரிமையாளராகவோ, நடத்தியவராகவோ இருந்திருக்க வாய்ப்பில்லை. அவர் நடத்தியிருந்தால் முதல் ஆண்டு மட்டுமே நடத்தியிருக்க வேண்டும். அதற்கான சான்றுகளை விவேகபாநுவின் முதல் ஆண்டின் பன்னிரெண்டு இதழ்களிலும் காணமுடியவில்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

விவேகபாநுவின் முதல் ஆறு இதழ்களின் ஆசிரியராக இருந்தவரான கணபதியானந்த சுவாமிகள், முதல் இதழில் 'பத்திரிகை' என்னும் தலைப்பில் எழுதியுள்ள கட்டுரையில் இடம் பெற்றுள்ள குறிப்பு ஒன்று இங்கு நினைவுகூரத்தக்கது.

"இப்பத்திரிகையின் ஷேமத்தைக் கருதும் சில கனவான்கள் சென்ற மாதம் (விவேகபாநுவின் முதல் இதழ் செப்டம்பர், 1900-இல் வெளிவந்தது. எனவே, இங்குச் சுட்டப்பெற்றுள்ள சில கனவான்களால் விடப்பட்ட அறிக்கை 18.8.1900-இல் வெளிவந்தது என்று கொள்ளவேண்டும். சென்ற மாதம் என்பது ஆகஸ்டு மாதத்தைக் குறிக்கும்) 18-ஆம் தேதி விடுத்த அறிக்கையைக் கண்ட சகல விவேகிகட்கும் இப்பத்திரிகை வெளிப்படுவதில் மிகுந்த சந்தோஷம் இருப்பதாக அறிகின்றோமாதலின் பொது ஜன நன்மையைக் கருதும் ஒவ்வொருவரும் இதனை நிலைநிறுத்தும் பொருட்டு எங்கும் இதனை வியாபிக்கச் செய்து உதவி புரிவார்களென நம்புகிறோம். சாக்ஷாத் கடவுளும் அருள் புரிவாராக (ப. 3).

மேற்குறித்த செய்தியில் உள்ள "சில கனவான்கள்" என்னும் சொற்கள் ஆழ்ந்து நோக்கத்தக்கன. இதற்குரிய விளக்கம் பின்னால் தரப்படும்.

ஏழாவது இதழிலிருந்து ஆசிரியர் பொறுப்பை ஏற்ற சுவாமி வள்ளிநாயகம் ஏப்பிரல் 1901 இதழில் 'நமது பத்திரிகை' என்ற தலைப்பில் குறித்துள்ள சில செய்திகள் ஈண்டு சுட்டத்தக்கன.

> "நமது திருநெல்வேலி ஜில்லாவில் சிறிது காலமாக 'விவேகபாநு' என்னும் இப்பத்திரிகை

> தோன்றி, ஆங்காங்குள்ள அஞ்ஞானவிருளை யோட்டி, மெஞ்ஞான ஒளியை வீசி, மயக்க மெனும் நித்திரையில் கிடப்பவரையெல்லாம் தனது விஷயமென்னும் கிரணங்களால் தட்டியெழுப்பி, அன்னோரை ஆத்மவுலகப் பிரவர்த்திக்குத் தூண்டி வருவதை யாவரும் அறிந்திருக்கலாம். இத்தகைய மேலான பரோபகாரத்தைச் செய்யக் கருதிய புண்ணியவான்களின் வேண்டுகோளின்படி....... (ப. 171).

இதில், 'இத்தகைய மேலான பரோபகாரத்தைச் செய்யக் கருதிய புண்ணியவான்களின்' என்னும் பகுதி நினைவிற் கொள்ளத்தக்கது.

'நமது பத்திரிகை' என்னும் அதே பகுதியில் இடம் பெற்றுள்ள பின்வரும் செய்தியும் ஆய்வுக்கு உரிய ஒன்றாகும்.

> "இப்பத்திரிகையின் போஷகராயுள்ளார் அறிவில் சிறியேனாகிய என்னை அப்பெரியோர் இறக்கிய பாரத்தை வகிக்கச் சொல்ல......."

'இப்பத்திரிகையின் போஷகராயுள்ளார்' என்னும் பகுதி மனங்கொள்ளத்தக்கது.

சுணபதியானந்த சுவாமிகளும் சுவாமி வள்ளிநாயகமும் பயன்படுத்தும் ''கனவான்கள்'', ''புண்ணியவான்கள்'', "போஷகராயுள்ளார்" என்னும் சொற்கள் உணர்த்தும் செய்தி யாது?

விவேகபாநுவைத் தொடங்கியவர் ஒருவர் இல்லை என்பதையே மேலே காணும் பன்மைச் சொற்கள் குறிக்கின்றன என்று கருத இடமுண்டு.

18.8.1900த்தில் அறிக்கை வெளியிட்ட கனவான்களில் ஒருவராக, மயக்கமெனும் நித்திரையில் கிடப்பவரையெல்லாம்

ஆத்மவுலகப் பிரவர்த்திக்குத் தூண்டக் காரணமாக அமைந்த விவேகபாநுவை வெளிப்படுத்தியதாகிய மேலான பரோபகாரத்தைச் செய்யக் கருதிய புண்ணியவான்களில் ஒருவராக, கணபதியானந்த சுவாமிகள் இறக்கிய பாரத்தைச் சுவாமி வள்ளி நாயகத்தை வகிக்கச் சொன்ன விவேகபாநுவின் போஷகர்களில் ஒருவராக விளங்கியவர் வ.உ.சி.

"விவேகபாநுவை வெளிவரச் செய்தேன்" என்னும் வ.உ.சியின் கூற்றிலுள்ள வெளிவரச் செய்தேன் என்பதற்குத் தூண்டினேன், ஊக்கினேன், (வெளிவரத்) துணை நின்றேன் என்று பொருள் கொள்வதே பொருத்தமாகத் தோன்றுகிறது.

வ.உ.சி. தனிமனிதராக விவேகபாநுவைத் தொடங்கவில்லை என்பதும், ஆன்மிகத்தை மக்களுக்குக் கற்பிக்க வேண்டும் என்பதற்காக வ.உ.சி.யும் அவர் நண்பர்களும் சேர்ந்து தொடங்கியதே அவ்விதழ் என்பதும் இவ்வாய்வின் முடிவுகளாக அமையவல்லன.

இதை முடிந்த முடிவாகக் கொள்ள வேண்டும் என்பதில்லை. வ.உ.சி. தனிமனிதராக விவேகபாநுவை நடத்தினார் என்பதற்குரிய தக்க சான்றுகள் கிடைக்கும் வரையில், வ.உ.சி. விவேகபாநுவை நடத்திய குழுவில் ஒருவராகவே இருந்தார் என்று கருதலாம்.

குற்றாலம் விவேகபாநுவில் (ஓர் ஆண்டு - 12 இதழ்கள்) எழுதியுள்ளவர்களின் எண்ணிக்கை 29. இதில் பதினான்குபேர் பிள்ளைமார் வகுப்பைச் சேர்ந்தவர்கள்; ஐவர் முதலியார் வகுப்பைச் சேர்ந்தவர்கள்; ஒருவர் பெண்மணி (பண்டிதை அசலாம்பிகை அம்மையார்); பார்ப்பனர் எழுவர்; ஒருவர் சிவ நாராயண சுவாமிகள் என்னும் துறவி; இன்னொருவர் பெயர் 'குப்தா' என்று மட்டும் உள்ளது. இந்த எண்ணிக்கையை மனத்திற் கொண்டு பார்க்கும்போது விவேகபாநுவைத் தொடங்குவது தொடர்பாக அறிக்கை வெளியிட்டவர்களும் இதழை நடத்தியவர்களும் பெரும்பாலும் திருநெல்வேலி மாவட்டத்துச் சைவப் பிள்ளைமார் வகுப்பைச் சார்ந்த அறிஞர் பெருமக்களாக இருக்கலாமோ என ஊகிக்க இடமுண்டாகிறது. இது வெறும்

ஊகம்தான். இந்த ஊகம் உண்மையாகுமாயின் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் திருநெல்வேலி சைவப் பிள்ளைமார்களின் வேதாந்த ஈடுபாடும் வேதாந்தத்தைப் பரப்ப அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகளும் பற்றித் தனியே விரிவாக ஆராய வாய்ப்புண்டு.

இதழ் நடத்தும் ஆர்வம் வ.உ.சி.க்கு எப்போதும் உண்டு. செல்வமும் செல்வாக்குமாக இருந்தகாலம் தொடங்கி, 'பிச்சைக்குப் பாரெல்லாம் ஓடிய' (இறுதிக்) காலம் வரையில் அவருக்கு அந்த விருப்பமும் ஈடுபாடும் இருந்ததை அவர் வாழ்க்கை வரலாறு உணர்த்துகிறது. அந்த விருப்பத்தின் ஈடுபாட்டின் தொடக்கமாக விவேகபாநுவை இவர் வெளிவரச் செய்த முயற்சியைக் கொள்ளலாம். இவருடைய தூண்டுதல் இல்லையென்றால், 'கனவான்கள்' பலர் ஒன்று சேர்ந்து அறிக்கை வெளியிட வாய்ப்பில்லாமல் போயிருக்கும். பலவாறு முயன்று அந்த இதழை வெளிக்கொணர்ந்தமையால்தான் 'வெளிவரச் செய்தேன்' என்று உரிமையோடு கூறமுடிந்தது.

விவேகபாநு வெளிவரக் காரணமாக இருந்த பலரில் வ.உ.சி. முதன்மையானவராக - தலையாயவராக இருந்து இயங்கினார் - இயக்கினார் என்று கருதலாம். விவேகபாநுவோடு வ.உ.சி.க்கு இருந்த தொடர்பு அழுத்தமானது. இவரே இதழை நடத்தினார் என்று பிறர் கருதுமளவு அந்த இதழோடு தம்மை இணைத்துக் கொண்டு செயலாற்றினார். அதனால்தான் விவேகபாநுவை வெளிக்கொணர முயன்றவர்கள் பலராக இருந்தும் இவர் பெயரே மக்கள் மனங்களில் பதிந்தது. விவேகபாநுவைப் பற்றிக் குறிப்பிட நேர்ந்தபோதெல்லாம் இவர் பெயரே முன் வைக்கப்பெற்றது.

## விவேகபாநு இதழின் நோக்கம்

விவேகபாநு இதழ் எந்த நோக்கத்தின் அடிப்படையில் அமைந்தது - எந்த நோக்கத்திற்காகத் தொடங்கப் பெற்றது என்பது அறியத்தக்கதொரு செய்தியாகும். இதைத் தெரிந்து

கொள்ள இயலுமாயின், வ.உ.சி.யின் வரலாற்றில் ஓர் இன்றியமையாத கட்டத்தைப் பற்றிய உண்மை புலனாகும்.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் (1900-1905) வ.உ.சி. யின் மனம் எதில் ஆழ்ந்திருந்தது - அரசியலிலா அன்றி ஆன்மிகத்திலா என்ற வரலாற்று உண்மையை அறிய விவேகபாநுவின் நோக்கம் எது என்பதை அறியும் முயற்சி பெரிதும் உதவும்.

'பாரதப் பெரியார்கள்' - நான்காம் பாகம் (இந்நூல், பப்ளிகேஷன்ஸ் டிவிஷன் வெளியீடாக வந்துள்ளது - 1971. இந்தி மூலத்திலிருந்து தமிழாக்கம் செய்திருப்பவர் ராஜலட்சுமி ராகவன். இந்நூலில் இடம்பெற்றுள்ள வ.உ.சி. பற்றிய கட்டுரையை எழுதியுள்ளவர் வி. ஆர். நாராயண்; பக். 223-229) என்னும் நூலில் இதுபற்றியதொரு குறிப்புக் காணப்பெறுகிறது.

வ.உ.சி. "சுதேசிக் கிளர்ச்சியின் ஆரம்ப காலத்தில் மக்களிடையே தேசபக்தியைப் பரப்புவதற்காக 'விவேகபாநு' என்னும் ஒரு மாதப் பத்திரிகையை ஆரம்பித்தார்" இவ்வாறு விவேகபாநு இதழின் நோக்கம் மேற்கண்ட நூலில் குறிப்பிடப் பெற்றுள்ளது.

இதில் மூன்று செய்திகள் குறிப்பிடப்பெற்றுள்ளன. ஒன்று வ.உ.சி. விவேக பாநுவை நடத்தினார் என்பது; இரண்டாவது சுதேசிக் கிளர்ச்சியின் ஆரம்பகாலத்தில் அவ்விதழைத் தொடங்கினார் என்பது; மூன்றாவது மக்களிடையே தேச பக்தியைப் பரப்புவதற்காக இதழ் நடத்தினார் என்பது. இவற்றில் முதல் கருத்து பொருத்தமற்றது என்பது முன்னரே விளக்கப் பெற்றது; பின் இரு கருத்துகளும் இங்கு ஆய்தலுக்கு உரியன.

'பாரதப் பெரியார்கள்' என்னும் நூல் குறிக்கும் சுதேசிக் கிளர்ச்சியின் ஆரம்பகாலம் என்பது கர்சன் வங்கத்தை இரண்டாகப் பிரித்ததன் விளைவாக எழுந்த எழுச்சியின் காலமாகும். அது 1905 முதல் 1908 முடிய அமைந்த காலமாகும். விவேகபாநு தொடங்கப்பெற்ற ஆண்டு 1900. இதனால் சுதேசிக் கிளர்ச்சி தொடங்குவதற்கு முன்பே விவேகபாநு இதழ்

தொடங்கப் பெற்றுவிட்டது என்பதை உணரலாம். வ.உ.சி. நேரடியான தொடர்பு கொண்டிருந்த குற்றாலத்திலிருந்தும் தூத்துக்குடியிலிருந்தும் வெளிவந்த விவேகபாநுவின் ஆயுள் ஓராண்டில் முடிந்துவிட்டது என்பதும் இங்கு நினைவுகூரத் தக்கது.

மக்களிடையே தேசபக்தியைப் பரப்புவதற்காகவே அவ்விதழ் தொடங்கப் பெற்றது என்னும் கூற்றும் ஆதாரமற்றதாகும். விவேகபாநு ஏன் தொடங்கப் பெற்றது என்பது பற்றிய விவரம் அதன் முதல் இதழில் (செப்டம்பர், 1900) மிகத் தெளிவாகக் கூறப்பெற்றுள்ளது. அப்பகுதி அப்படியே இங்குத் தரப்பெற்றுள்ளது.

> "ஜகதீசனுடைய பாதாரவிந்தங்களை அடைந்தாலொழிய கவலை நீங்குவதின்று. அவரை அடையப்பெறாத குறையே சகல குறைகளுக்கும் காரணமாயிருக்கிறது. அது பரிகரிக்கப்பட்டால் சகல குறைகளும் நீக்கப்படுவதோடு பின்னொருக் காலும் குறைவுபடாத நித்ய திருப்தியுமடையப் படுகின்றது. அக்குறை யாதெனின் விவேகக் குறையே. அதைத்தான் அஞ்ஞானமென்றும், அவித்தை என்றும், ஜீவர்களுடைய பந்தத்துக் கேதுவான காரணசரீரமென்றும் சொல்லுவர். ஆதலின் அக்குறையை நிவர்த்திப்பதே மேலான கடமையும் அதற்காகச் செய்யு முயற்சியே உத்தமப் பிரவிர்த்தியுமாம்..
>
> ஆனால், அக்குறையை ஒழிக்கக்கூடியது விவேகமேயன்றி வேறன்று. அவ்வித விவேகத்தை ஜனங்களுக்குப் போதிப்பதற்கு மார்க்கங்கள் பல உளவேனும் அவற்றுளெல்லாம் சிறந்தது பத்திரிகையே என்பது துணிவு. ஏனென்றால், இது எத்திறத்தாருக்கும் பக்குவ முதலியது கவனியாமல் தூர, சமீபத்தை நோக்காமல்

> ஞானத்தை உபதேசிக்கிறது. ஆதலின், லௌகீகத்திற்கும் வைதீகத்திற்கும் அவசியமான ஒழுங்குகளை எடுத்துப் போதிக்கும் பத்திரிகை யொன்றேனும் தற்காலத்தில் பிரசுரிக்கப்பட்டு வராத நமது ஜில்லாவில் அத்தகைய பத்திரிகை யொன்று வெளிப்படுத்த அதிகவிருப்ப முற்றிருந்த எமக்கு அதைக்கொண்டு முடிக்கும் சக்தி சிறிதுமின்றாயினும் சில அறிஞர்கள் விஷய தானம் செய்வதாய் வாக்களித்து எமக்கு ஊக்கத்தை உண்டு பண்ணினமையின், இப்பத்திரிகையைப் பிரசுரம் செய்ய ஒருவாறு துணிந்தனர்.
>
> ............................................ விஷயங்களென்னும் கிரணங்களால் அஞ்ஞானமென்னும் அந்தகாரம் துரத்தப்படுதலின் அவ்விஷயங்களுடைய இப்பத்திரிகை ஞானசூரியன் என்னும் பொருளடங்கிய விவேகபாநு என்று அழைக்கப் பட்டது *(பக். 2-3).*

விவேகபாநுவின் முதல் ஆசிரியரான கணபதியானந்த சுவாமிகள் சொந்தக் காரணங்களால் விலகியதும் ஆசிரியர் பொறுப்பை ஏற்ற சுவாமி வள்ளிநாயகம் தாம் ஆசிரியப் பொறுப்பேற்ற முதல் இதழில், 'நமது பத்திரிகை' (வால்யூம் 1, ஏப்பிரல், 1901, ப. 171) என்ற தலைப்பில் எழுதியுள்ள செய்தியின் ஒரு பகுதி இங்குக் குறிக்கத்தக்கது:

> "நமது திருநெல்வேலி ஜில்லாவில் சிறிது காலமாக விவேகபாநு என்னும் இப்பத்திரிகை தோன்றி ஆங்குள்ள அஞ்ஞான விருளையோட்டி மெஞ்ஞான ஒளியை வீசி, மயக்கமெனும் நித்திரையில் கிடப்பவரையெல்லாம் தனது விஷயமென்னும் கிரணங்களால் தட்டியெழுப்பி அன்னோரை ஆத்மவுலகப் பிரவர்த்திக்குத் தூண்டி வருவதை யாவரும் அறிந்திருக்கலாம்."

கணபதியானந்த சுவாமிகளாலும் சுவாமி வள்ளி நாயகத்தாலும் தரப்பெற்றுள்ள மேற்கண்ட விளக்கங்கள் விவேகபாநுவின் தோற்றத்திற்கான காரணத்தைப் புலப்படுத்த வல்லன.

"விவேகபாநு விளங்குற எங்கும்"

"விவேகபாநு'வை வெளிவரச் செய்தேன்"

என்னும் வ.உ.சி.யின் பாடலடிகளில் 'விவேகபாநு விளங்குற எங்கும்' என்னும் அடி மேற்குறித்த கருத்தை அரண் செய்ய வல்லது.

வ.உ.சி.யோடு தொடர்புடைய குற்றாலம் விவேகபாநுவின் பன்னிரெண்டு இதழ்களிலும் வெளிவந்துள்ள கட்டுரைகளின் மொத்த எண்ணிக்கை 54. அவற்றில் 42 ஆன்மிகம் பற்றியவை என்பது குறிப்பிடத்தக்கது. எஞ்சிய பன்னிரண்டில் கவிதைகள் இரண்டு; வாழ்க்கை வரலாறு ஒன்று; இல்லற வாழ்க்கையோடு தொடர்புடையவை ஆறு; பத்திராதிபர் குறிப்புகள் இரண்டு; குடியின் கேடு பற்றியது ஒன்று. தேசபக்தி பற்றிய கட்டுரையோ, கவிதையோ வேறு குறிப்போ எதுவுமே விவேகபாநு முதல் தொகுதியில் இல்லை.

உண்மை இப்படி இருக்க, பொறுப்பு வாய்ந்த அரசுத் துறை (பப்ளிகேஷன்ஸ் டிவிஷன்) வெளியீட்டில் 'மக்களிடையே தேச பக்தியைப் பரப்புவதற்காக விவேகபாநு தொடங்கப்பட்டது என்று குறிக்கப்பட்டுள்ளமை வியப்பிற்குரிய ஒன்றாகும்.

## விவேகபாநு இதழின் வரலாறு

### முதல்கட்டம் – குற்றாலம், தூத்துக்குடி விவேகபாநு

18.8.1900-த்தில் வ.உ.சி.யும் அவர் நண்பர்கள் சிலரும் சேர்ந்து விவேகபாநு என்ற பெயரில் இதழ் ஒன்று தொடங்க இருக்கும் தங்கள் விருப்பத்தை - எண்ணத்தை ஓர் அறிக்கையின் மூலம் தெரிவித்தனர். அந்த அறிக்கைக்குக் கற்றவர் நடுவே கிடைத்த வரவேற்பு, விவேகபாநுவைத் தொடங்க எண்ணியவர்களை

மகிழ்வித்தது. அடுத்த திங்களில் (செப்டம்பர் 1900) விவேக பாநுவின் முதல் இதழ் வெளிவந்தது. கணபதியானந்த சுவாமிகள் என்பவர் இதழின் ஆசிரியர் பொறுப்பை ஏற்றார். இதழ், திருநெல்வேலி நூருல் இஸ்லாம் அச்சு இயந்திர சாலையில் பதிப்பிக்கப்பட்டுக் குற்றாலம் அகஸ்தியர் ஆசிரமத்தில் வெளியிடப்பெற்றது. முதல் ஆறு இதழ்களுக்கு ஆசிரியராக இருந்த கணபதியானந்த சுவாமிகள் சொந்தக் காரணங்களால் விலகிக் கொள்ள நேர்ந்தது. அதனால், ஏழாவது இதழிலிருந்து சுவாமி வள்ளிநாயகம் ஆசிரியர் பொறுப்பை ஏற்றார். ஆறு இதழ்கள் அவருடைய பொறுப்பில் தூத்துக்குடியிலிருந்து வெளிவந்தன. அத்துடன் இதழ் நின்றது.

வேறு யாரும் நடத்துவாராயின் இதழின் முழுச் சுதந்திரங்களையும் கொடுப்பதாக அறிவிக்கப் பெற்றது. சிறந்த முறையில் நடந்துவந்த இதழ் நிறுத்தப்பட்டமைக்கு உரிய காரணங்களுள் முதன்மையானது மிகக் குறைந்த சந்தா ஏற்படுத்தியதால் நேர்ந்த பொருள் நஷ்டமே' என்பர் கந்தசாமிக் கவிராயர் (விவேகபாநு, வால்யூம் 2, புத்தகங்கள் 1-2, டிசம்பர், 1902, ப. 2). இது முதல் கட்டம்.

இந்த அளவில் குற்றாலத்திலிருந்தும் தூத்துக் குடியிலிருந்தும் வெளிவந்த விவேகபாநுவின் வரலாறு நிறைவுறுகின்றது. அடுத்த கட்டத்தில் அது மதுரை விவேக பாநுவாக மாறி மதுரையிலிருந்து வெளிவரத் தொடங்குகிறது.

## இரண்டாவது கட்டம் – மதுரை விவேகபாநு

டிசம்பர் 1902-இலிருந்து மதுரை விவேகபாநு வெளிவந்தது. "இவ்விவேகபாநு முதலில் ஒரு வருஷம் நடைபெற்றதும் தற்போது நாம் கைக்கொண்டதும் இதன் முன்னுள்ள அறிக்கையாலும் நண்பர்கள் யாவரும் அறிவார்களன்றோ" என்று வினவும் கந்தசாமிக் கவிராயர் விவேகபாநுவின் உரிமையைப் பெற்றுத் தாம் நடத்த விரும்பியதன் காரணத்தையும் குறிப்பிடுகின்றார்.

"............................................. ஒரு தமிழ்ப் பத்திரிகை இத்தென்னாடாகிய நற்றமிழ்த் தேயத்துத் தோன்றப் பெறாதிருக்குமோர் பெருங்குறையைத் தவிர்ப்பது வேண்டுமென்னும் விருப்பம் எம்முள்ளத்துள் நெடு நாளாகத் தோன்றி வளர்ந்துள்ளது.

புதிதாகத் தோற்றுவித்தலினும் பழையவற்றைப் புதுக்குதல் பெரும்பேறு தருமென்ற முதியோர் கருத்தைக் கடைபிடித்து குமரக் கடவுள் திருவருளைச் சிந்தித்து, 'பாநு'வை நடாத்தும் இப்பெரும் பொறுப்பை வகிக்க முன் வந்தோம்" *(மேலது. ப. 4).*

"முற்கால, தற்கால சாஸ்திர ஆராய்ச்சி சம்பந்தமான அரிய விஷயங்களையும், இலக்கிய இலக்கண சம்பந்தமான பாஷா விஷயங்களையும், முடிபுனை மூவேந்தர், குறுநில மன்னர், செந்தமிழ்ப் புலவர் முதலிய புகழ்பெற்ற தக்கார் சரித்திரங்களையும் வியக்கத்தக்க நவீனக் கதைகளையும், சிற்பம், சித்திரம் முதலியவற்றால் உணரப்படும் விஷயங்களையும், இதுகாறும் அச்சுவிமானம் ஏறப்பெறாத பழைய, புதிய நூல்களிற் சிலவற்றையும், அவ்வப்போது தேச நன்மைக் கடுத்த நற்காரியங்களையும் மற்றும் விவேக விருத்திக்கின்றியமையாத பற்பல விஷயங்களையும் கற்றோரேயன்றி மற்றோரும் எளிதிற்பொருள் உணர்ந்து கொள்ளும்வண்ணம் ........ எழுதுவித்து உலகங்கொண்டுவக்குமாறு ஒரு தமிழ்ப் பத்திரிகை...."

நடத்த வேண்டும் என்பது கந்தசாமிக் கவிராயரின் எண்ணமாக இருந்தது (மேலது).

விவேகபாநுவை நடத்த கந்தசாமிக் கவிராயர் மேற்கொண்ட முயற்சிகள் இங்குக் குறிக்கத்தக்கன. ஊர் ஊராகச் சென்று இதழுக்குச் சந்தா சேர்க்க உழைத்தார். பலவாறு முயன்று திட்டமிட்டுச் செயலாற்றிய அவருக்கு நண்பர்களின் உதவி நிறைவாக அமைந்தது. அவருக்கு உதவியவர்களில் வ.உ.சி.யும் ஒருவர்.

> "தூத்துக்குடி வக்கீலும் தமிழ் வித்துவான்கட்குத் தாய் போன்ற பரோபகாரியும் நூல் ஆராய்ச்சியிலேயே நெடுநேரம் போக்கி மகிழ்பவரும் ஆகிய ஸ்ரீமாந் வ.உ.சிதம்பரம் பிள்ளையவர்கள் வருஷந்தோறும் ரூ. 12 நன்கொடையளித்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்கள்"

என்று குறிப்பிடுகின்றார் கந்தசாமிக் கவிராயர் (விவேகபாநு, சனவரி, 1905, ப. 6).

அந்நாளில் புகழ்பெற்று விளங்கிய இந்த இதழில் வ.உ.சி.யின் படைப்புகள் இடம்பெற்றுள்ளன (கட்டுரைகள் 'சுதேசாபிமானம்', பிப்ரவரி 1906, பக். 44-50; 'சுதேச ஸ்டீமர் விக்ஞாபனம்', ஆகஸ்டு - நவம்பர் இதழ்கள், 1906, பக். 294-297. பாடல்கள்; 'ஈகை', சனவரி, 1904, பக். 18-19; 'அன்பு' ஏப்பிரல் 1904, பக். 154-155; 'உண்மை', மே, 1904, பக். 183-184). பாரதியாரின் முதல் கவிதை இவ்விவேகபாநுவில்தான் வெளிவந்தது. (தனிமையிரக்கம், சூலை, 1904, ப. 273). இருபதாம் நூற்றாண்டின் முதல் பத்து ஆண்டுகளில் புகழோடு விளங்கிய தமிழறிஞர் பலரும் இவ்விதழில் எழுதியுள்ளனர்.

"படிக்கும்பொழுது இடையில் கீழே வைத்துவிட்டு வேறொன்றைப் பார்க்க மனம் வருவதில்லை" என்று உ.வே. சாமிநாதையரால் (ஏப்பிரல் 1905, ப. 1) பாராட்டப் பெற்ற மதுரை விவேகபாநு எத்தனை ஆண்டுகள் தொடர்ந்து நடந்தது என்பது அறிய வேண்டிய ஒன்றாகும்.

## மதுரை விவேகபாநு வாழ்ந்த காலம்

மதுரை விவேகபாநு டிசம்பர் 1902 முதல் டிசம்பர் 1908 முடிய கந்தாமிக் கவிராயரின் சொந்த இதழாக வெளிவந்தது. அதாவது ஆறு ஆண்டுகள் விவேகபாநுவின் உரிமையாளராக இவர் இருந்தார். அந்த ஆறு ஆண்டுகளும் ஆசிரியர் பொறுப்பிலும் இவர் இருந்தார் என்றாலும், ஐந்து ஆண்டுகள் மட்டுமே ஆசிரியராக எஸ். சாமிநாதையருடன் இணைந்து பணியாற்றினார். ஓராண்டு எஸ். சாமிநாதையர் மட்டுமே - இதழில் கந்தசாமிக் கவிராயர் பெயரும் ஆசிரியர் என்று இருந்தபோதும் செயல்பட்டார்.

> "1907–இல் தூத்துக்குடி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி விஷயமாகவும் என் சொந்த வேலைகள் சிலவற்றைக் கருதியும் யான் மதுரையில் இல்லாமல் சேலம், கோயமுத்தூர், பாலக்காடு, கள்ளிக்கோட்டை முதலிய அயலிடங்களில் யாத்திரை செய்து கொண்டிருந்தமையால் அவ்வருட முழுவதும் என்னுடன் பத்திராதிபராக இருந்த ஸ்ரீமத் ஐயர் அவர்கள் பத்திரிகையாக நடத்திவந்தார்கள். பத்திராதிபர் ஸ்தானத்தில் எழுதும் தலையங்கம் எல்லாம் அவர்களே எழுதினார்கள். 1907 முழுதும் யான் மதுரையில் இருக்கவில்லை யாதலாலும், இடையில் மதுரைக்கு வரினும் இரண்டொரு நாளே தங்குவதும் உடனே புறப்படுவதுமாக இருந்தமையாலும் பத்திரிகை விஷயம் முழுதும் ஸ்ரீமத் ஐயரவர்களே கவனித்து நடத்தி வந்தார்கள் (வித்தியாபாநு, 'தூத்துக்குடி மு. சண்முகம் பிள்ளை அவர்கட்கு உண்மை அறிவிப்பு', தொகுதி 6, பகுதி 5, ப. 159).

கந்தசாமிக் கவிராயரின் மேற்கண்ட கூற்று, 1907இல் இவர் விவேகபாநுவின் ஆசிரியர் பொறுப்பில் இல்லை என்பதைத் தெளிவுப்படுத்துகிறது.

1908-ஆம் ஆண்டுடன் கந்தசாமிக் கவிராயர் விவேக பாநுவின் எல்லாப் பொறுப்புகளிலிருந்தும் விலகிக் கொள்கின்றார். அதற்கான காரணத்தையும் அவரே வெளியிட்டுள்ளார்.

"நமது பத்திரகாபிமானிகளுக்கு விஞ்ஞாபனம் ஐயன்மீர்,

1909 ஜனவரி முதல் யாம் தேகசுகமின்றிப் பிணியால் வருந்தி வருவதாலும் நமது விவேகபாநு அச்சியந்திர சாலை விஷயமாகச் சிற்சில புதிய சௌகரியங்கள் செய்ய வேண்டியிருத்தலானும் மற்றும் சில காரணங்களாலும் இந்த விவேகபாநு பத்திரிகையை நடத்தும் முழுப் பொறுப்பையும் ஸ்ரீமத். எஸ். சாமி நாதையரவர்களிடமே கொடுத்திருக்கிறோம். இவர்கள் இதுவரை எம்முடன் கூடிப் பத்திராதிபராக இருந்தவர்கள். இனிமேல் புரப்ரையிட்டராகவும் பத்திராதிபராகவும் இருந்து செவ்வனே நடத்துவார்கள். நாமும் இப்பத்திரிகை விஷயத்தில் ஊக்கத்துடன் வேண்டுவன செய்து வருவோம். நமது சந்தா நேயர்களும் முன்போல் அபிமானித்துவரும்படி பிரார்த்திக்கிறோம். பத்திரிகை சம்பந்தமாக எழுதுவோர்களும் பணம் அனுப்புவோர்களும் மதுரை விவேகபாநுப் பத்திராதிபர் ஸ்ரீமத் எஸ். சாமிநாதையர் அவர்களுக்கு என்று விலாசமிட்டெழுத வேண்டுகிறோம். இதுவரை 25 ரூபாவுக்குக் குறையாத நன்கொடையளித்துள்ள போஷகர்கள் எல்லாருக்கும் இலவசமாகவே பத்திரிகை அனுப்பி வருவார்களென்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இங்ஙனம்

மதுரை — மு.ரா. கந்தசாமிக் கவிராயர்

16.2.1909 — புரப்ரைட்டர் அண்டு பத்திராதிபர்

(விவேகபாநு, தொகுதி 7, பகுதி 10-12, பின்அட்டை).

## மதுரை விவேகபாநு - இரண்டாவது காலகட்டம்

ஆறு ஆண்டுகள் கந்தசாமிக் கவிராயரின் உரிமைப் பொருளாக இருந்த மதுரை விவேகபாநு, 1909 முதல் எஸ். சாமிநாதையரின் உடைமையானது. தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையே இடையறாது கருதி ஊக்கத்துடன் உழைத்தவரும் தமிழில் ஆழ்ந்த பயிற்சியும் புலமையும் நிறைந்தவருமான எஸ். சாமிநாதையரை ஆசிரியராகவும் உரிமையாளராகவும் கொண்டு வெளிவந்த மதுரை விவேகபாநுவின் இரண்டாம் காலகட்டத்து இதழ்கள் பெரிதும் முயன்றும் பார்வைக்குக் கிடைக்கவில்லை. அதனால் எஸ். சாமிநாதையரின் விவேகபாநு வெளிவந்ததா அன்றி வெறும் அறிவிப்போடு நின்றுவிட்டதா என்பதை அறிய முடியவில்லை.

## விவேகபாநு - மூன்றாவது கட்டம் - டர்பன்

விவேகபாநு மதுரையிலிருந்து தென்னாப்பிரிக்காவிலுள்ள டர்பனுக்கு இடம்பெயர்ந்தது. வ.உ.சி.யின் பல நூல்களுக்கான மதிப்புரைகள் டர்பன் விவேகபாநுவில் வெளிவந்துள்ளன. வ.உ.சி. அவற்றைத் தம்முடைய நூல்களில் எடுத்தாண்டுள்ளார். மதிப்புரைக் குறிப்புகளிலிருந்தே விவேகபாநு டர்பனிலிருந்து வெளியானதை அறிய முடிகிறது. ஆனால் மதுரையிலிருந்து எந்த ஆண்டு டர்பனுக்குச் சென்றது, எத்தனை ஆண்டுகள் வெளிவந்தது என்பன போன்ற விவரங்கள் அறியுமாறு இல்லை.

ஏ.கே. செட்டியாரின் 'புண்ணியவான் காந்தி' என்னும் நூலில் இது தொடர்பான குறிப்பு ஒன்றைக் காணமுடிகிறது:

> "தென்னாப்பிரிக்காவில் நேடாவில் தமிழரின் சமய வாழ்க்கை மேம்பாடு அடைவதற்கு உயிர் நாடியாக இருந்தவர் பிறையாறு திரு. சொ. விருத்தாசலம் பிள்ளை அவர்கள்; அவர் 1900-ஆம் ஆண்டில் நேடாவில் குடியேறினார்...... 1912-ஆம் ஆண்டில் சரஸ்வதி விலாச அச்சகத்தைத் தொடங்கினார். 'விவேகபாநு'

என்னும் பத்திரிகையை நடத்தினார். 1920–ஆம் ஆண்டில் இந்தியாவுக்குத் திரும்பினார்'' (முன்னுரை, பக். XXVI - XXVII).

இந்தத் தகவல்கள் டர்பன் விவேகபாநுவைப் பற்றி ஓரளவாவது அறிய உதவுகின்றன. திரு. சொ. விருத்தாசலம் பிள்ளை என்பவர் அதன் உரிமையாளர் என்பதும் 1912 முதல் டர்பன் விவேகபாநு வெளிவந்தது என்பதும் ஏ.கே. செட்டியார் தரும் செய்திகள். 1920-இல் சொ. விருத்தாசலம் இந்தியா திரும்பினார் என்றாலும் விவேகபாநு அதற்குப் பிறகும் டர்பனில் இருந்து வெளிவந்தது. அ. மாதவையா 'பஞ்சாமிர்தம்' என்னும் இதழை 1924-இல் சென்னையில் தொடங்கிய போது, அதன்முதல் இதழைப் பாராட்டி வரவேற்று டர்பன் விவேகபாநு எழுதியுள்ளது. இது டர்பன் விவேகபாநு 1924-இல் வெளிவந்ததை உணர்த்துகிறது. வேறு தக்க சான்றுகள் கிடைக்கும் வரையில் விவேகபாநு டர்பனிலிருந்து 1912 முதல் 1924 வரையில் வெளிவந்தது என்று கருதலாம்.

1900 ஆண்டில் குற்றாலத்தில் தொடங்கிய தனது பயணத்தை மதுரையில் தொடர்ந்து ஏறக்குறைய 1924-இல் டர்பனில் நிறைவு செய்தது விவேகபாநு.

விவேகபாநு இதழ், குற்றாலத்திலும் தூத்துக்குடியிலும் நடந்தபோதும், மதுரையிலிருந்து வெளிவந்தபோதும், டர்பன் விவேகபாநுவாக மாறியபோதும் அவ்விதழோடு வ.உ.சி.க்குத் தொடர்பு இருந்தது. இந்த இதழின் தோற்றம் முதல் மறைவு வரையில் ஏதாவது ஒரு வகையில் வ.உ.சி. அதனோடு தொடர்பு கொண்டிருந்தார் என்று கூறலாம்.

மூன்று வேறுபட்ட சூழல்களில் வாழ்ந்து மறைந்த விவேகபாநுவின் வரலாறு முறையாகத் தொகுக்கப்படுமாயின், தமிழக அரசியல் வரலாற்றிலும் சமய வரலாற்றிலும், அதன் பங்கை - அது ஆற்றியுள்ள பணிகளை முழுமையாக அறிய இயலும். தமிழ் இதழியல் வரலாற்றில் அதன் இடம் பற்றி அறியும் வாய்ப்பும் அமையும்.

விவேகபாநு உணர்த்தும் பேருண்மை ஒன்று உண்டு. அது, வ.உ.சி.யின் தத்துவ ஈடுபாடு பற்றியதாகும். வ.உ.சி. யைப் பற்றிக் குறிப்பிடும்போது அவரது அரசியல் ஈடுபாடே பெரிதும் பேசப் பெறுவது வழக்கம். அரசியலில் முனைப்போடு ஈடுபடுவதற்கு முன்பே தத்துவத்தில் - ஆன்மிகத்தில் ஆழ்ந்தவர் வ.உ.சி. என்னும் உண்மையை விவேகபாநு உணர்த்துகிறது.

ஆன்மிகத்தைப் பரப்ப வேண்டும் என்ற அவருடைய விழைவும் அதற்காக ஓர் இதழ் தொடங்கவேண்டும் என்று எண்ணியமையும் அவருடைய ஆன்மிக ஈடுபாட்டைப் புலப்படுத்தவல்லன. அரசியல் வாழ்விற்கு முன்னும் பின்னும் தத்துவம் அவரை ஆட்கொண்டது. வ.உ.சி.யின் வாழ்வில் அரசியலுக்கு என்ன இடமுண்டோ, இலக்கியத்திற்கு என்ன இடமுண்டோ அந்த இடம் - அதே அளவு இடம் ஆன்மிகத்திற்கும் கடவுள் சிந்தனைக்கும் உண்டு.

வ.உ.சி. யின் ஆன்மிகம் பற்றிய சிந்தனையின் தொடக்கம் இளமையிலேயே அமைந்துவிட்டது என்பதை விவேகபாநு இதழின் தோற்றமும் அதில் இடம்பெற்றுள்ள அவருடைய படைப்புகளும் உணர்த்தவல்லன. வ.உ.சி. என்னும் ஆன்மிகவாதியின் வரலாற்றை அறிய வேண்டுமாயின், குற்றாலம் விவேகபாநுவிலிருந்து தொடங்க வேண்டும். அந்த அளவு விவேகபாநு வ.உ.சி.யின் வாழ்வில் இரண்டறக் கலந்துவிட்டது.

விவேகபாநுவின் முதல் ஆசிரியரான கணபதியானந்த சுவாமிகளின் வரலாறும் குற்றாலம் அகஸ்தியர் ஆசிரமத்தின் வரலாறும் அறியப்படுமாயின், வ.உ.சி.யின் ஆன்மிக வாழ்க்கையின் இருண்ட பகுதிகள் ஒளிபெறும்.

## இந்துநேசன்

விவேகபாநுவை அடுத்து வ.உ.சி. யோடு தொடர்புடைய இதழாகக் கருதப்படுவது 'இந்துநேசன்' ஆகும். இந்து நேசனுக்கும் வ.உ.சி.க்கும் இருந்த தொடர்புகளை இதுவரையில் யாரும் சான்றுகளுடன் நிறுவவில்லை என்றாலும், நாற்பது

ஆண்டுகளுக்கும் மேலாக ஆய்வுலகில் வ.உ.சி.யை இந்துநேசன் இதழோடு ஏதாவது ஒரு வகையில் இணைத்துப் பேசுவது வழக்கமாகியுள்ளது. இந்தச் செய்தி எந்த அளவிற்கு உண்மையானது? இந்துநேசன் இதழின் உண்மையான வரலாறு என்ன? என்பன போன்ற வினாக்களுக்கு விடை தேடுவதே இந்தப் பகுதியின் நோக்கம்.

## இந்துநேசனும் வ.உ.சி. வரலாற்றாசிரியர்களும்

வ.உ.சி.யின் வாழ்க்கை வரலாற்றை முதன்முதலில் எழுதியவர்கள் சிலருண்டு. அவர்கள் வ.உ.சி.யின் இதழியல் தொடர்புகள் பற்றிக் கூறியுள்ள செய்திகள் இங்குக் குறிக்கத் தக்கன.

விவேகபாநு - இம் மாதாந்திர சஞ்சிகையை சுவாமி வள்ளிநாயகமென்பவருடன் கூடி பிரசுரித்து வந்தார். (எம். கிருஷ்ணசாமி ஐயர் - தொகுப்பாசிரியர், வி.ஓ. சிதம்பரம் பிள்ளை சரித சுருக்கம், பக். 12-13).

சுவாமி வள்ளிநாயகத்தின் துணை கொண்டு, 'விவேகபாநு' என்ற தமிழ் மாதப் பத்திரிகையொன்றை ஆரம்பித்து நடத்தி வந்தார் (சிவஞான கிராமணி, கப்பலோட்டிய தமிழன், ப. 6).

சுவாமி வள்ளிநாயகம் என்ற பெரியாருடன் சேர்ந்து, 'விவேகபாநு' என்ற வேதாந்த மாதப் பத்திரிகையைப் பிள்ளையார் சுமார் நாற்பதாண்டுகளுக்கு முன் நடத்தினார் (பரலி. சு. நெல்லையப்பர், வ.உ.சிதம்பரம் பிள்ளை சரித்திரம், ப. 9).

வ.உ.சி.யின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய தொடக்ககால நூலாசிரியர்கள் இவர்கள். 1908, 1944 ஆகிய ஆண்டுகளில் இவர்கள் எழுதிய நூல்களில் விவேகபாநுவைப் பற்றிய குறிப்பே உள்ளது. இவர்கள் யாரும் இந்துநேசனைப் பற்றி ஏதும் குறிப்பிடவில்லை.

## இந்துநேசனும் வ.உ.சி. சுப்பிரமணியமும்

இந்துநேசனைப் பற்றிய குறிப்பை முதன்முதலில் வ.உ.சி.யின் மகன் வ.உ.சி. சுப்பிரமணியத்தின் கட்டுரையில்தான் காண முடிகின்றது.

சுவாமி வள்ளிநாயகம் என்பவரின் உதவி கொண்டு பிள்ளையவர்கள் 'விவேகபாநு' என்ற தமிழ் மாதாந்திர சஞ்சிகையை நடத்திவந்தார். 'இந்துநேசன்' பத்திரிகைக்குச் சிறிது காலம் ஆசிரியராகவும் இருந்திருக்கிறார் ('உலகத்தை ஆள' (கட்டுரை), முன் குறிப்பிட்ட நூல், ப. 36).

இவரே, 1956இல் கலைக்களஞ்சியத்தில் தாம் எழுதிய வ.உ.சி. பற்றிய கட்டுரையில் மீண்டும் இதே செய்தியைக் குறித்துள்ளார் (இவர் விவேகபாநு, இந்துநேசன் பத்திரிகைகளின் ஆசிரியராகவும் இருந்தார். தொகுதி - 4, ப. 663).

இவருக்கு முன்பும் இவருடைய சமகாலத்திலும் இவரைத் தவிர வேறு எவரும் வ.உ.சி.யை இந்துநேசனோடு இணைத்து எழுதியதாக அறியமுடியவில்லை. இவருக்குப் பின்பே இக்கருத்து பரவத் தொடங்கியது (இவர் - வ.உ.சி) விவேகபாநு, இந்துநேசன் போன்ற இதழ்களுக்கு ஆசிரியராக இருந்துள்ளார் என்று தமிழ்க் கலைக்களஞ்சியத்தில் குறிப்பிடப்பெற்றுள்ளது - மா.சு. சம்பந்தன், அச்சும் பதிப்பும், ப. 356). வ.உ.சியை இந்துநேசனின் ஆசிரியராகக் கருதும் - எழுதும் மரபைத் தொடங்கி வைத்தவர் இவரே.

வ.உ.சி.க்கும் இந்துநேசனுக்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது என்பதே உண்மையாகும். இந்துநேசன் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தொடங்கப்பெற்று இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலம் வரையில் வாழ்ந்ததொரு இதழாகும். இதன் வரலாற்றை அறியும்போது இதற்கும் வ.உ.சி.க்கும் எவ்விதமான தொடர்பும் இல்லை என்பது புலனாகும்.

## இந்துநேசன் வரலாறு

இன்றும் புகழோடு விளங்கும் ஆங்கில நாளிதழான இந்து (Hindu)வை 1878இல் தொடங்கிய ஆறு இளைஞர்களுள் ஒருவர் மு. வீரராகவாச்சாரியார் என்பவராவர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் புகழ்பெற்று விளங்கிய தமிழர்களில் இவரும் ஒருவர். இதழ்த் துறையைப் போலவே, அரசியலிலும் சாதனைகள் நிகழ்த்தியவர். இவரே இந்துநேசனைத் தொடங்கி நடத்தியவராகக் கருதப்படுகிறார். முதலில் வாரம் இருமுறையாகவும் (A Hundred Years of the Hindu, p. 130) பிறகு நாளிதழாகவும் (Kasturi Ranga Iyengar, V.K. Narasimhan, p. 27) நடத்தினார். 1906-இல் வீரராகவாச்சாரியார் காலமானார். அதுவரை அவரே அதன் உரிமையாளராகவும் ஆசிரியராகவும் இருந்தார்.

இந்துநேசன் சென்னையில் தொடங்கப் பெற்ற இதழாகும். நீண்டகாலம் - வ.உ.சி.யின் மறைவுக்குப் பிறகும்கூட, அது சென்னையிலிருந்துதான் வெளிவந்தது. 1906, 1907, 1908 - வ.உ.சி. அரசியலில் முனைப்பாக ஈடுபட்டிருந்த ஆண்டுகள்; 1908 மார்ச்சு முதல் 1912 டிசம்பர் வரையில் சிறை வாழ்க்கை. 1913-இலிருந்து சில ஆண்டுகள் சென்னையில் வாழ்ந்தார். ஆனால், அவர் சென்னையில் வாழ்ந்த காலத்தில் வெளிவந்த இந்துநேசனின் தரம் உயர்ந்ததாக இல்லை என்பதைத் தேசபக்தர் சுப்பிரமணிய சிவம் நடத்திவந்த ஞானபாநு இதழின்மூலம் அறியமுடிகிறது.

"சென்னையில் நடைபெறும் இரண்டு தினசரிப் பத்திரிகைகளும் இவ்விளம்பரத்தைப் பிரசுரிக்க மறுத்துவிட்டன. அந்நியச் சொற்களைக் கேட்பாரில்லாமல் பிரயோகித்துத் தமிழிலக்கியத்தையும் ஒருமை, பன்மைகூடத் தெரியாது ...... பன்மை எழுவாய்க்கும் பயனிலை ஒருமையாகப் பிரசுரிக்கப் படித்திருக்கும் பத்திரிகை, கண்டவாறெல்லாம் எழுதித் தமிழிலக்கணத்தையும் சித்திரவதை செய்கின்ற 'இந்துநேசன்' எங்ஙனம் நமது விளம்பரத்தைப் பிரசுரம் செய்யும்?" (ஞானபாநு, செப்டம்பர், 1915, பக். 163-164).

மேற்கண்டவாறு கடுமையாகக் கண்டனம் செய்யுமளவிற்குத் தரம் தாழ்ந்த தமிழ் நடையைக் கொண்டதாக இந்துநேசன் வ.உ.சி. சென்னையில் வாழ்ந்த காலத்தில் வெளிவந்து கொண்டிருந்தது. தமிழ்ப் புலமை நிறைந்தவரான வ.உ.சி. தொடர்களே தடுமாறும் ஓர் இதழுக்கு ஆசிரியராக இருந்தார் என்னும் கூற்று பொருளற்றுப் போகிறதன்றோ? இந்தக் காலகட்டத்தில் இந்துநேசனின் ஆசிரியராக இருந்தவர் எஸ். சுந்தரராஜ ஐயங்கார் என்று கருதுவோர் உண்டு (பெ.சு. மணி, வீரமுரசு சுப்பிரமணிய சிவா, ப. 313). இந்தக் காலப் பகுதியில் வ.உ.சி. ஆசிரியராக இருந்திருக்க வாய்ப்பு ஒரு சிறிதும் இல்லை. வ.உ.சி. ஆசிரியராக இருந்திருப்பாரேயானால், ஞானபாநுவின் ஆசிரியரும் வ.உ.சி.யின் மிக நெருங்கிய நண்பருமான சுப்பிரமணிய சிவா, அவருடைய பெயரையே குறிப்பிட்டுக் கண்டனம் செய்திருப்பார். அங்ஙனம் செய்யாமையும் வ.உ.சி. மேற்குறித்த ஆண்டுகளில் இந்துநேசன் ஆசிரியராக இல்லை என்னும் கருத்துக்கு வலிமை சேர்ப்பதாகும்.

முப்பதுகளில் இந்துநேசன் ல. அனந்தய்யரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்தமையை அறிய முடிகிறது. 1932-இல் வெளிவந்த ஆண்டுமலர் (வருஷ அனுபந்தம்) இந்நூலாசிரியரின் பார்வைக்குக் கிடைத்தது. அதில் இந்துநேசனின் ஆசிரியராகவும் உரிமையாளராகவும் ல. அனந்தய்யர் குறிக்கப் பெற்றுள்ளார். அவர் இதழின் பிறபொறுப்புக்களில் இருந்தவர்களோடு இணைந்து எடுத்துக் கொண்ட ஒளிப்படம் ஒன்றும் அம்மலரில் இடம்பெற்றுள்ளது. 1931-ஆம் ஆண்டு மலரின் சிறப்புகள் இதில் பாராட்டப் பெற்றுள்ளன (வருஷ அனுபந்தம், 1932, ப. 5). முப்பதுகளில் வ.உ.சி. சென்னையில் வசிக்கவில்லை. சிறிதுகாலம் கோயில்பட்டியிலும் பின்னர், 1932-இல் இருந்து தூத்துக்குடியிலும் வாழ்ந்து 1936-இல் (18.11.1936) காலமானார்.

ல. அனந்தய்யரின் மறைவிற்குப் பின் 'இந்துநேசன்' இலட்சுமிகாந்தன் என்பவர் பொறுப்பில் வந்தது. அவர் காலத்தில் இதழ் எல்லாத் தகுதிகளையும் இழந்து, 'மஞ்சள் பத்திரிகை' என்ற நிலைக்குத் தாழ்ந்தது. கலையுலகில் புகழ்பெற்று விளங்கியவர்களைப் பற்றிய அவதூறுகளை

எழுதுவதையே இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்தவரான இலட்சுமிகாந்தன் பொறுப்பில் இருந்தகாலம் இந்துநேசனைப் பொறுத்தவரையில் இருண்டகாலமாகும்.

அவருடைய மறைவிற்குப் பிறகு இந்துநேசன் அதன் அச்சிட்டாளரான ஏ.டி. சபாபதியின் கைக்கு மாறியது. அதன் செய்திகளும், தமிழ்நடையும் மேலும் கொச்சையாயின. தமிழ்நாட்டில் நடவடிக்கையும் தடையும் ஏற்படும் என்று கருதிய சபாபதி பத்திரிகையைப் பெங்களூருக்கு மாற்றினார். அதன்பின் சில ஆண்டுகளில் இந்துநேசன் மறைந்தது (பாரதி அறிஞரும் இதழியல் ஆய்வாளருமான திரு. ரா. அ. பத்மநாபன், ஆய்வாளருக்கு எழுதி அனுப்பிய 'இந்துநேசன்' இதழ் பற்றிய குறிப்புகளில் இருந்து பயன்படுத்தப் பெற்றது).

மேற்கண்ட குறிப்புகளிலிருந்து இந்துநேசனின் வரலாற்றை ஒருவாறு தொகுக்கலாம்:

இந்துநேசன் மு. வீரராகவாச்சாரியாரால் தொடங்கப் பெற்றது. தொடங்கப் பெற்ற ஆண்டு தெரியவில்லை. ஏறக்குறைய அவர் காலமான 1906 வரையில் அவரே உரிமையாளராகவும் ஆசிரியராகவும் இருந்தார்.

அவருக்குப்பின் எஸ். சுந்தரராஜ ஐயங்கார் ஆசிரியராக இருந்தார். அவர் எவ்வளவு காலம் ஆசிரியர் பொறுப்பில் இருந்தார் என்பதை அறிய முடியவில்லை.

முப்பதுகளில் ல. அனந்தய்யர் ஆசிரியராகவும் உரிமையாளராகவும் இருந்து இதழை நடத்தினார். அவருடைய பொறுப்பில் எத்தனை ஆண்டுகள் இதழ் நடந்தது என்பதும் அறியுமாறு இல்லை.

அவருடைய மறைவுக்குப்பின் இலட்சுமிகாந்தன் உரிமையாளராகவும் ஆசிரியராகவும் பொறுப்பேற்றார். அவர் எத்தனை ஆண்டுக் காலம் இதழை நடத்தினார் என்ற விவரமும் கிடைக்கவில்லை.

இந்துநேசன் தன்னுடைய நெடிய வரலாற்றில் ஐந்து ஆசிரியர்களைக் கண்டதைப் பல்வேறு குறிப்புகளிலிருந்து ஓரளவு அறியமுடிகின்றது. ஆனால், எங்குமே வ.உ.சி. சுப்பிரமணியத்தின் கட்டுரைக் குறிப்பைத் தவிர - அவரைப் பின்பற்றி எழுதியவர்களின் குறிப்புகளைத் தவிர, வேறு எங்கும் வ.உ.சி. இந்துநேசனின் ஆசிரியராக இருந்தமைக்கான சான்றுகளைக் காண முடியவில்லை.

சென்னையில் தோன்றி நீண்டகாலம் சென்னையிலேயே நடந்த இதழ் இந்துநேசன். கடைசிக்காலத்தில் பெங்களூரில் இருந்து வெளிவந்தது. வ.உ.சி.யோ தம்முடைய வாழ்வின் பெரும்பகுதியைத் திருநெல்வேலி மாவட்டத்தில் கழித்தவர். அவர் சென்னையில் வாழ்ந்த காலம் சில ஆண்டுகளே. அக்காலத்தில் இந்துநேசனின் தரம் எப்படி இருந்தது என்பது முன்னரே தெளிவாக்கப்பெற்றது. அத்துடன் அந்தக் காலகட்டத்தில் இந்து நேசனின் ஆசிரியராக இருந்தவரின் பெயரையும் அறிய முடிகிறது.

ஆக, இந்துநேசனின் ஆசிரியராக வ.உ.சி. இருந்தார் என்னும் வ.உ.சி. சுப்பிரமணியத்தின் கூற்று எந்த வகையிலும் பொருந்தாமையை உணரலாம்.

# புதுச்சொல்லாக்கம் - வ.உ.சி.யின் பார்வை

அறிவியலைத் தமிழில் தரும் முயற்சிகள் 1830-ஆம் ஆண்டிலிருந்தே மேற்கொள்ளப் பெற்றன. இக்காலகட்டத்தில் தான் முதல்வகுப்பு முதல் எட்டாம்வகுப்பு வரையில் தமிழ் பயிற்சி மொழியாகியது. இந்தச் சூழலை ஒட்டித்தான் அறிவியல் தமிழாக்க முயற்சிகளும் இணைந்தன; இரண்டும் இணைகோடுகளாயின. அறிஞர் தொடங்கிய தமிழாக்க முயற்சிகள் விடுதலை இயக்கத் தலைவர்களின் சிந்தனையைத் தொட்டன. எதையும் பரந்த நோக்குடன் எண்ணிப்பழகிய அவர்தம் பார்வையில் தமிழாக்க முயற்சிகள் புதிய வடிவம் பெற்றன; விரிந்த பொருளை ஏற்றன. அறிவியல் செய்திகள் விரிவாகவும் பலவாகவும் தமிழுக்கு வரவேண்டிய தேவையை அவர்கள் உணர்ந்தனர்; அதற்கான வழி முறைகளை எண்ணத் தலைப்பட்டனர்.

அறிவியல் தமிழாக்கத்தின் அடிப்படைத் தேவையான புதுச் சொல்லாக்கம் (கலைச்சொல்லாக்கம்) பற்றிய அவர்தம் கருத்தோட்டங்கள் ஈண்டு நோக்கத்தக்கன. அவை வ.உ.சி.யின் புதுச்சொல்லாக்கம் பற்றிய பார்வையைப் புரிந்து கொள்ளப் பயன்படும்.

## புதுச்சொல்லாக்கம் பற்றிச் சுப்பிரமணிய சிவம்

புதுச்சொல்லாக்கம் குறித்த சிவத்தின் கருத்துகளைப் பிற இதழ்கள் பற்றிய அவருடைய திறனாய்விலிருந்து அறிய முடிகிறது.

'நீதி' என்னும் வார இதழ் பற்றிக் கருத்துத் தெரிவிக்கும் போது புதுச்சொல்லாக்கம் பற்றியும் பேசுகிறார் சிவம்.

> "ஆங்கில பாஷையிலுள்ள சட்டப் புத்தகங்களில் காணப்படுகிற சில முக்கிய பதங்களுக்குத் தமிழ்ப் பாஷையிலும் தக்க பதங்களை உபயோகிக்க வேண்டும். தக்க பதங்கள் தமிழ் பாஷையில் இல்லாவிட்டால் நூதனமாகவாவது ஆங்கில வார்த்தைகளுக்குச் சரியாகப் பொருள்படும்படியான தமிழ்ச் சொற்களை உண்டு பண்ணிக் கொள்ளுதல் அவசியமாகுமே தவிர, ஆங்கிலப் பதங்களை அப்படியப்படியே தமிழ் எழுத்துக்களிலும் எழுதி விடுவது ஸ்வய பாஷையைக் கொலைசெய்தது போலாகும்"
> *(ஞானபாநு, டிசம்பர், 1914, ப. 214)*

என்று தெளிவாகத் தம்முடைய கருத்தை முன்வைக்கின்றார் சிவம்.

இராஜாஜி சேலத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றிய காலத்தில் அறிவியல் கலைச்சொற்களைத் தமிழில் உருவாக்குவதற்காக இதழ் ஒன்றைத் தம் நண்பர்களின் துணையோடு தொடங்கி நடத்தினார். 'தமிழ் சாஸ்திரியப்பத சபைப் பத்திரிகை' என்னும் பெயரில் அமைந்த அவ்விதழைப் பற்றிப் பிரபஞ்சமித்திரனில் 'பத்திரிகை வரவு' என்னும் தலைப்பில் சிவம் எழுதியுள்ளதாவது:

> "தமிழ் சாஸ்திரிய்பத சபைப் பத்திரிகை என்னும் பெயர் கொண்ட மாதப் பத்திரிகை யொன்று சேலத்திலிருந்து வரப் பெற்றோம்.

தற்கால சாஸ்திரியப்பதங்களுக்குச் சரியான தமிழ் வார்த்தைகளை ஆராய்ந்து கண்டு பிடிக்கவோ அல்லது நூதனமாக சிருஷ்டிக்கவோ செய்வது என்ற ஒரே நோக்கத்துடன் இப்பத்திரிகை வெளிப் போந்திருக்கிறது. இது மிகவும் உயர்ந்த நோக்கம் என்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. ஆனால், இது மிகமிகக் கடினமானதொரு காரியமென்பதற்கு நமது பார்வையில் இப்பொழுதிருக்கும் முதல் பத்திரிகையே சான்றாகும்.

பழைய சங்கத்து நூல்களையும் மற்றும் ஆராய்ச்சி செய்தோ சமஸ்கிருத பாஷையிலிருந்தோ தக்க பதங்களைத் தேடி எடுப்பதற்கு நாம் பிரியப்படுவோமேயொழிய இப்பத்திரிகையில் ஓரிடத்தில் கூறியுள்ளவாறு எக்காரணத்தை முன்னிட்டேனும் ஐரோப்பியப் பதங்கள் தமிழ்ப் பாஷையை வியபிசார பாஷையாக்கிவிடுவதற்கு நாம் ஒருபொழுதும் சம்மதிக்க மாட்டோம்" *(20.10.1916, ப. 7).*

தமிழில் அறிவியல் சொற்களைப் படைப்பதில் ஆர்வம் மட்டும் இருந்தால் போதாது. அந்த ஆர்வம் தமிழின் தனித் தூய்மையைத் தேய்ப்பதாக அமையக்கூடாது என்பதைப் பிரபஞ்சமித்திரன் வாயிலாகச் சிவம் வலியுறுத்தினார் (பெ.சு. மணி, முன் குறிப்பிட்ட நூல், ப. 341).

## புதுச்சொல்லாக்கம் – பாரதியாரின் கருத்து

'தமிழ்நாட்டின் புதிய விழிப்பு' என்னும் தலைப்பில் வெளிவந்த கட்டுரையில் 'தமிழில் சாஸ்த்ர பரிபாஷை' என்னும் துணைத் தலைப்பில், 'அஸ்திவாரக் காரியம்' என்று குறிப்பிட்டுப் புதுச்சொல்லாக்கம் பற்றிய தம் கருத்தைத் தெரிவித்துள்ளார் பாரதி.

''பண்டிதர்கள் செய்து வைக்கவேண்டிய அடிப்படைக் காரியம் ஒன்றுண்டு. கூடியவரை சாஸ்த்ர பரிபாஷையை நிச்சயப்படுத்தி வைத்தால் பிறகு மொழிபெயர்ப்பு தொடங்குவோர்க்கு அதிக சிரமமிராது'' *(பாரதியார் கட்டுரைகள், ப. 209).*

"ஐரோப்பிய ஸங்கேதங்களையெல்லாம் எளிய ஸம்ஸ்கிருத பதங்களில் போட்டு..... அந்தச் சொற்களை வேண்டியவரை, இயன்றவரை, தேச பாஷைகள் எல்லாவற்றிலும் ஏக காலத்தில் கைக்கொண்டு வழங்கலாம்.

ஐரோப்பாவில் எல்லா பாஷைகளும் இவ்விதமாகவே லத்தீன், யவன பரிபாஷைகளைக் கைக்கொண்டிருக்கின்றன. இவ்வாறு செய்வதால் நமது தேச பாஷைகளில் ஸங்கேத ஒற்றுமை ஏற்படும். அதனால் ஸாஸ்த்ரப் பயிர் தேச முழுவதிலும் வளர்ந்தோங்கி வருதல் எளிதாகும்" *(மேலது, ப. 210).*

மேலை நாடுகளில் செழித்திருந்த அறிவியலும் பிறதுறை சார்ந்த செய்திகளும் தமிழ் மட்டுமே அறிந்தோரும் விளங்கிக் கொள்ளும் வகையில் தமிழில் பெயர்க்கப்பட வேண்டும் என்பதில் முனைப்புக் காட்டியவர் பாரதியார். அத்தகைய மொழிபெயர்ப்புகளுக்கு அடிப்படைத் தேவையான புதுச்சொல்லாக்கம் பற்றிய அவருடைய சிந்தனை சிவத்தின் கருத்தினின்றும் மாறுபட்டதாக இருந்தது.

## வ.வே.சு. ஐயரும் புதுச்சொல்லாக்கச் சிந்தனையும்

''எத்தனை பரிபாஷைப் பதங்கள் தமிழில் வேண்டியதாக இருக்கின்றன? புதிய கருத்துகளுக்கும் புதிய சாஸ்திரங்களுக்கும் உரித்தான பதங்கள் அனேகம் சிருஷ்டிக்கத் தான்

> வேண்டியதாக இருக்கும்" *(தமிழ், வ.வே.சு. ஐயர் கட்டுரைகள், ப.14)*

என்ற புதுச்சொல்லாக்கத்தின் தேவையைச் சுட்டிக் காட்டும் வ.வே.சு. ஐயர், புதிய சொற்களின் உருவாக்கம் பற்றியும் கருத்துத் தெரிவித்துள்ளார்.

> "தமிழில் நூதன எண்ணங்களுக்கும் நூதன கலைகள் சாஸ்திரங்களுக்கும் ஏற்ற பதங்கள் அகப்படாது என்பது கேவலம் அசூயைதான். எத்தனை பேர்கள் முயற்சி செய்து பார்த்தார்கள்? ஆங்கிலம் முதலிய பாஷைகளில் நூதன எண்ணங்களும் தோரணைகளும் வர எத்தனை வருஷங்கள் பிடித்ததென்று அறிவீரோ? அப்படி நூறு வருஷங்களில் ஆங்கிலேயர்கள் உழைத்து உழைத்து, இழைத்து இழைத்து உண்டாக்கியிருக்கிற பாஷா நயத்தை உழைக்காமல், இழைக்காமல் ஒரு நாளில் சம்பாதித்து விடலாமா?" *(மேலது, பக். 17-18)*

என வினவும் வ.வே.சு. ஐயர்,

> "நூதன வார்த்தைகள் கொடுக்க சமஸ்கிருதம் என்ற பெரிய ரத்தினக் களஞ்சியம் நம்மிடத்திருக்கிறது. மனத்தினால் நினைக்கக் கூடிய எந்த விஷயத்திற்கும் சமஸ்கிருதத்தி லிருந்து பதங்கள் எடுக்க முடியும். முதலில் அப்பதங்கள் நயமில்லாததுபோல் இருக்கலாம். ஆனால், வெட்கப்பட்டுப் பதுங்கி விடாமல் அந்தப் பதங்கள் தங்களுக்கு இயற்கையாக உள்ள ஸ்தானங்களில் வந்து உட்காரட்டும், நாளா வட்டத்தில் அவைகளின் யோக்கியதைக்குத் தகுந்த கௌரவம் அவைகளுக்கு வந்து சேரும். பிறகு நிச்சிந்தையாக அவை உலாவலாகும்" *(மேலது. பக். 18-19)*

என்று புதுச்சொல் உருவாக்கத்திற்கு வழிகாட்டுகிறார்.

## புதுச்சொல்லாக்கமும் இராஜாஜியின் எண்ணங்களும்

> "ஒரு விஷயத்திற்குச் சொல் இல்லை, புதிதாகத்தான் ஆக்கிக் கொள்ள வேண்டும் என்று ஆழ்ந்து சோதித்துப் பார்த்து உண்மையில் முயன்றும் கிடைக்கவில்லை என்றால், புதியதொரு சொல்லை ஆக்கும் முறையில் ஈடுபடவேண்டியது அவசியம்.
>
> பழைய கலைச் சொற்களைத் தேடித் திரட்டலாம்; புதிய சொற்களை ஆக்கலாம்............. தமிழும் சமஸ்கிருதமும் சேர்த்து உலகத்தையே அளக்கலாம்" *('கலைச்சொல்லாக்க முயற்சிகள்', ராஜாஜி கட்டுரைகள், பக். 18-19)*

என்பது இராஜாஜியின் கருத்தாகும்.

சுப்பிரமணிய சிவம், பாரதியார், வ.வே.சு. ஐயர், இராஜாஜி ஆகியோர் வ.உ.சி.யின் சமகாலத்தவர். மேலே சுட்டிக்காட்டியுள்ள பகுதிகள் புதுச்சொல்லாக்கம் பற்றிய அவர்தம் எண்ணங்களின் வெளிப்பாடுகள். புதுச்சொல்லாக்கத்தின் தேவையை இவை வற்புறுத்துகின்றன. அத்துடன் அதற்கான வழிமுறைகளையும் அக்காலக் கண்ணோட்டத்தில் வெளிப்படுத்தியுள்ளன.

பழைய தமிழ் இலக்கியங்களிலிருந்து சொற்களைத் தேர்ந்தெடுத்தல், புதிதாக உருவாக்குதல், சமஸ்கிருதத்திலிருந்து எடுத்துக் கொள்ளுதல், இவையே வ.உ.சி. வாழ்ந்த காலத்தில் புதுச் சொல்லாக்கத்திற்கு உரிய வழிமுறைகளாகக் கருதப்பட்டன. இந்தப் பின்னணியில் வ.உ.சி.யின் புதுச் சொல்லாக்கச் சிந்தனைகளை அணுகுவது பொருத்தமாக இருக்கும்.

### வ.உ.சி.யின் புதுச்சொல்லாக்கச் சிந்தனைகள்

'பாரதபுத்ரன்' என்பவர் சுதேசமித்திரனில் 'தமிழ்ப் பாஷையும் சுதேசமித்திரனும்' என்னும் தலைப்பில் எழுதிய கட்டுரைக்கு மறுப்பாக எழுதிய 'தமிழ்' என்ற கட்டுரையில்

புதுச்சொல்லாக்கம் பற்றிய தம்முடைய கருத்துகளை வெளியிட்டுள்ளார் வ.உ.சி.

> "குறித்த பொருளைச் சரியானபடி குறிப்பிக்க நம் பாஷையில் பதங்களில்லையென்று தமிழ் பாஷை இலக்கண இலக்கியங்களைக் கற்றவர் எவரும் கூறார்" *(29.10.1915 சுதேசமித்திரன், மறுவெளியீடு- குமரிமலர், சூலை, 1968, ப. 26)*

என்பது வ.உ.சி.யின் நம்பிக்கையாக இருந்தது.

> "யுத்த சம்பந்தமான பதங்களுக்கும் விஞ்ஞான சம்பந்தமான சொற்களுக்கும் சரியான தமிழ் மொழிகளை நாம் சிருஷ்டித்துக் கொள்ளலாமாதலால் அவற்றிற்கும் நாம் ஆங்கில மொழிகளை உபயோகிக்க வேண்டிய அவசியமில்லை" *(மேலது. ப. 28)*

என்று உறுதியோடு உரைக்கும் வ.உ.சி.,

> "யான் தமிழ் இலக்கண இலக்கியங்களில் ஒரு சிலவே கற்றுள்ளேன். அவ்வாறிருந்தும் யான் அறிந்துள்ள எந்தப் பாஷையின் எந்த மொழியையும் நம் தமிழ் மக்களில் எவரும் எளிதில் அறியுமாறு (சமஸ்கிருத சொற்களின் கலப்பேயில்லாத) தனித்தமிழில் மொழி பெயர்த்துக் கொடுக்கத் தக்க திறமையை யுடையேன்" *(மேலது, ப. 26)*

எனக் கூறியிருப்பது ஆழ்ந்து நோக்கத்தக்கது. முன்னர்க் குறித்த வ.உ.சி.யின் சமகாலத்துத் தலைவர்கள் தமிழில் முடியும் என்று எண்ணினார்கள் என்றாலும் சமஸ்கிருதத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தனர். 'சமஸ்கிருத பாஷையிலிருந்து தக்க பதங்களைத் தேடி எடுப்பதற்கு நாம் பிரியப்பட வேண்டும்' என்று சுப்பிரமணிய சிவமும், 'ஐரோப்பிய ஸங்கேதங்களையெல்லாம் எளிய ஸமஸ்கிருத

பதங்களில் போட்டு..... என்று பாரதியாரும், 'நூதன வார்த்தைகள் கொடுக்க சமஸ்கிருதம் என்ற பெரிய ரத்தினக் களஞ்சியம் நம்மிடத்திருக்கிறது' என்று வ.வே.சு. ஐயரும் '...... சமஸ்கிருதமும் சேர்த்து உலகத்தையே அளக்கலாம்' என்று இராஜாஜியும் கருதியபோது, வ.உ.சி. 'சமஸ்கிருத சொற்களின் கலப்பே இல்லாத தனித்தமிழில்' மொழி பெயர்த்துக் கொடுக்க ஆர்வம் கொண்டிருந்தமையைப் புதுச் சொல்லாக்கச் சிந்தனை வரலாற்றில் ஒரு திருப்பமாகக் கருதலாம்.

## வ.உ.சி.யின் சொல்லாக்கங்கள்

வ.உ.சி.யின் புதிய சொல்லாக்கங்களை இவருடைய மொழிபெயர்ப்பு நூல்களில் பெரிதும் காண முடிகிறது.

Indolence-சோம்பல், Self indulgence-மீதூண், Slander- புறங் கூறுதல் போன்ற பொருள் பொதிந்த சொல்லமைவுகளை 'அகமே புறம்' என்னும் நூலில் காணலாம் ('உயர்தர வாழ்வு', ப. 41).

Gossip and idle conversation, Abusive and unkind speech, Levity or irrelevent speech, captiousness or fault finding speech என்று பேச்சு பற்றிய பல்வகைப் பொருள்தரும் சொற்களைப் 'புறங்கூறல்', 'பயனில சொல்லல்', 'நிந்தித்தல்', 'புன்மொழி பகரல்', 'குதர்க்கம் பேசல்' என வேறுபடு பொருள் புலப்பாடு தோன்ற மொழி உருவாக்கம் செய்துள்ளமை சிறப்பாக எடுத்துக்காட்டத்தக்கது (மேலது).

'மனோ நிலைமைகளும் அவற்றின் காரியங்களும்' என்னும் கட்டுரையில் (அகமே புறம், பக். 68-69). hatred என்பதை 'வெறுப்பு' என்றும், self slavery என்பதைத் 'தனக்கடிமை' என்றும், folly என்பதை 'மடமை' என்றும், mortification of spirit என்பதை 'ஆன்ம அழிவு' என்றும், self-conquest என்பதைத் 'தன்னை வெல்லல்' என்றும், insight என்பதை 'அகப்பார்வை' என்றும் மொழிபெயர்த்துத்

தெளிவான - நேரான் பொருள் தரும் சொல்லாக்கங்களைப் படைத்துள்ளார்.

வலிமைக்கு மார்க்கம் என்னும் நூலில் தாம் பயன்படுத்தியுள்ள சில வடசொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களையும் பொருள் விரிவுகளையும் தனித்துக் குறித்துள்ளார் ('சில சொற்களின் பொருள்கள்' ப. vii).

ஆன்மா - பேரறிவு ('யான்', 'எனது' எனக் கருதாது உலக நன்மையைக் கருதுவது)

ஜீவன் - சிற்றறிவு ('யான்', 'எனது' எனக் கருதித் தனது நன்மையையே கருதுவது)

பரோக்ஷ ஞானம் - கேள்வி அல்லது கல்வி மூலம் அடையும் அறிவு

அபரோக்ஷ ஞானம் - மனம் அல்லது பொறிவழிக் காணப்படும் அறிவு

துன்பம் - பொறியால் வரும் வருத்தம்

இன்பம் - பொறிக் களிப்பு

சுகம் - மனக்களிப்பு

வ.உ.சியின் சொல்வளம், சொல்லாக்கத் திறன், பொருள் வேறுபாடு அறிந்து சொற்களைப் பயன்படுத்தும் திறம், சொற்பொருளை உணர்த்தும் ஆற்றல் ஆகிய சொல்லாட்சித் திறன்களுக்கு மேற்காட்டிய பட்டியல் சிறந்த சான்றாக அமையவல்லது.

'இன்பம் - பொறிக்களிப்பு', 'சுகம் - மனக்களிப்பு' என்று பொருள் வேறுபாடு உணர்த்தும் போக்கில் வ.உ.சி. உருவாக்கியுள்ள சொல்லாக்கங்கள் நினைந்து மகிழத்தக்கன.

# 'தமிழில் எழுத்துக்குறை' - வ.உ.சி.யின் கண்ணோட்டம்

## தமிழில் எழுத்துகளைச் சேர்த்தல்

அண்மைக் காலத்தில் தமிழில் எழுத்துகளைக் குறைக்க வேண்டும் என்பது பரவலாகப் பேசப்படும் செய்தியாகும். எண்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு தமிழில் எழுத்துகளைச் சேர்க்க வேண்டும் என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

'தமிழில் எழுத்துக்குறை' என்ற தலைப்பில் பாரதியார் ஞானபாநு இதழில் கட்டுரை ஒன்று எழுதினார் (சூலை, 1915, பக்.102-105). அதில் 'வருக்க எழுத்துகள்' இல்லாதது தமிழுக்குக் குறை என்று குறிப்பிட்டார். அக்கட்டுரை எதிர்ப்பை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. பாரதியாரின் நெருங்கிய நண்பரான வ.உ.சி. அவருடைய கருத்துகளை மறுத்தார். வ.உ.சி.யின் மறுப்புக்குப் பாரதியார் விடையளித்தார். கால இடைவெளிகளில் தமிழுக்குப் புதிய எழுத்துகள் வேண்டுமா வேண்டாமா என்ற வாதம் வளர்ந்தது. தமிழ் எழுத்துச் சீர்திருத்த வரலாற்றில் பாரதியார் - வ.உ.சி. கருத்துப் பரிமாற்றம் சிறப்புமிக்கது.

பாரதியாரின் 'தமிழில் எழுத்துக்குறை' என்னும் கட்டுரைக்கு எழுதிய மறுப்பில் (ஞானபாநு, செப்டம்பர், 1915, பக்.153-157) வ.உ.சி. வரலாற்றுக் குறிப்பொன்றைத் தந்துள்ளார். பாரதியாருக்கு முன்பே தமிழில் எழுத்துக்குறைவு பற்றிச் சிந்தித்தவர்கள் உண்டு என்னும் அரிய குறிப்போடு வ.உ.சி.யின் கட்டுரை தொடங்குகிறது.

"சென்ற சில வருஷங்களாகச் சில அறிவாளிகள் நம் தமிழ்ப் பாஷையில் சில எழுத்துக்கள் குறைவாயிருக்கின்றன என்றும் அக்குறையை நிவர்த்திக்கத்தக்க பிறபாஷை எழுத்துக்களேனும் பிற சில குறிகளேனும் நம் தமிழ்ப் பாஷை எழுத்துக்களோடு சேர்க்கப்பட வேண்டும் என்றும் கூறி வருகிறார்கள்" *(மேலது. ப. 153).*

தமிழ் எழுத்துச் சீர்திருத்த வரலாற்றை ஆராய முற்படுபவர்கள் இதிலிருந்து தொடங்க வேண்டும் என்பது போல வ.உ.சி.யின் கட்டுரைப் பகுதி அமைந்துள்ளது. பொதுவாக, தமிழில் புதிய எழுத்துகளைச் சேர்த்தல் என்பது பற்றி எழுதுபவர்களெல்லாம் பாரதியாரின் 'தமிழில் எழுத்துக்குறை' என்னும் கட்டுரையிலிருந்தே தொடங்குகின்றனர் (ம.பொ.சிவஞானம், விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு, பக்.105-109; பெ.சு. மணி, வீரமுரசு சுப்பிரமணிய சிவா, பக்.301-306). ஆயின் இந்தச் சிந்தனை பாரதியாருக்கும் முந்தையது என்பதையும் 1915க்கு முன்பே இதுபற்றிய எண்ணங்கள் வெளிவரத் தொடங்கிவிட்டன என்பதையும் வ.உ.சி.யின் கட்டுரைக் குறிப்பு உணர்த்துகின்றது.

தமிழில் புதிய எழுத்துகளைச் சேர்த்தல் என்னும் சிந்தனையின் பின்னணி, அது உருவான காலச் சூழல் இவற்றை அறியும் முயற்சி தமிழ் எழுத்துச் சீர்திருத்த வரலாற்றில் புதிய ஒளியைப் பாய்ச்சுவதாக அமையும். பாரதியாருக்கு முன்பே இது பற்றிய சிந்தனைகள் புலவர் நடுவே பரவியிருந்ததாகச் சுட்டும் வ.உ.சி.யின் குறிப்பு ஒரு காலகட்டத்தின் வரலாற்றை ஆராய்ந்து அறியும் அவசியத்தை ஏற்படுத்தியுள்ளது. வ.உ.சி. குறிப்பிடும் 1915-க்கு முந்தைய பகுதியைத் தமிழ் எழுத்துச் சீர்திருத்த வரலாற்றின் முதற்கட்டமாகக் கொள்ளலாம். இதற்கு அடுத்த காலப் பிரிவாக அமைவது பாரதியார் - வ.உ.சி. கருத்துப்போர். அவர்களிடையே நிகழ்ந்த கருத்துப் பரிமாற்றத்தையும் அடுத்து வந்த காலப் பகுப்பில் அது ஏற்படுத்திய பாதிப்புகளையும் இனி வரும் பக்கங்களில் காணலாம்.

## பாரதியாரின் கருத்துகள்

"ஸமஸ்க்ருதம், ஹிந்தி, பெங்காளி, மஹாராஷ்டிரம், குஜராத்தி, தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய மற்ற பாரத

பாஷைகளிலெல்லாம் வர்க்க எழுத்துக்கள் உண்டு.

அதாவது க ச ட த ப என்ற ஐந்து வல்லெழுத்துக்களில் ஒவ்வொன்றுக்கும் நான்கு வேறுபாடுகள் இருக்கின்றன. ஆனால் தமிழில் அப்படி இல்லை. எல்லாவற்றிற்கும் ஒரே எழுத்தைத்தான் பயன்படுத்துகிறோம்.

வெளிநாட்டு ஊர்களின் பெயர்களையும் மனிதர்களின் பெயர்களையும் நாம் சரியான படி சொல்ல வேண்டுமா? வேண்டாமா?

நமது பத்திரிகைகளில் ஐரோப்பாவிலுள்ள நகரங்கள், நதிகள், மலைகள் முதலியவற்றின் பெயர்களைப் பார்க்கும்போது கண்கூசுகிறது. அதைத் தமிழ் மாத்திரமறிந்த தமிழர் எப்படி வாசிப்பார்கள் என்பதை நினைக்கும்போது காது கூசுகிறது. தமிழில் எழுத்துக் குறைகிறது இதற்கென்ன விமோசனம்?

எல்லா ஐரோப்பிய பாஷைகளுமே அந்நிய பாஷைகளிலுள்ள விசேஷ உச்சரிப்புகளுக்கு இணங்கும்படி சில தனிக்குறிகள் ஏற்பாடு செய்து வைத்துக் கொண்டிருக்கின்றன.

நாமும் அப்படியே சில விசேஷக்குறிகள் ஏற்பாடு செய்து கொள்ளுதல் மிகவும் அவசியமாகும்.

நான் இந்தக் குறையை நீக்கும் பொருட்டாக மிகவும் சுலபமாக ஐந்து நிமிஷங்களில் யாரும் கற்றுக் கொள்ளக் கூடிய சில குறிகள் தயார் செய்து வைத்திருக்கின்றேன்" *(ஞானபாநு, ஜூலை, 1915, பக்.102-105).*

இக்கட்டுரை பாரதியார் பாண்டிச்சேரியில் வாழ்ந்த காலத்தில் எழுதியதாகும். அங்கு உடன் வாழ்ந்தவரான, அரவிந்தரின் நட்பினால் தூண்டப்பெற்ற சிந்தனையின் விளைவாக மலர்ந்ததே இக்கட்டுரை என்று கருதலாம்.

அரவிந்தர் தமிழில் வருக்க எழுத்துகள் இல்லாமையை ஒரு குறையாகக் கூறியதை எடுத்துக்காட்டி, அவர் முன் மொழிந்ததை வழி மொழிந்து இக்கட்டுரையைப் பாரதியார் எழுதியுள்ளார்.

## வ.உ.சி. மறுக்கிறார்

பாரதியாரின் தமிழ் எழுத்துகள் தொடர்பான கருத்துகளை வ.உ.சி.யால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அவற்றை மறுத்து ஞானபாநுவிலேயே எழுதினார். செப்டம்பர் 1915-இல் 'தமிழ் எழுத்துக்கள்' என்னும் தலைப்பில் வெளிவந்த அக்கட்டுரையில் (பக்.153-157) வ.உ.சி.யின் வாதத்திறமையையும் சிந்தனைத் தெளிவையும் காணமுடிகிறது. அதில் சில இன்றியமையாத பகுதிகளைக் காணலாம்.

> "நமது நண்பரவர்கள் தமது நிரூபத்தின் ருவது பகுதியில் ஸமஸ்கிருதச் சொற்களை ஸமஸ்கிருத வழக்கப்படி நாம் உச்சரிக்க வேண்டிய அவசியமில்லையாதலால், நமக்கு அந்த எழுத்துக்கள் வேண்டுவதில்லையென்று சிலர் ஆக்ஷேபிக்கலாம். சரி – நியாயமென்று வைத்துக் கொள்வோம்", என்று கூறுகின்றார்கள். அச்சிலர் பிறபாஷைகளின் வழக்கப்படி நாம் உச்சரிக்க வேண்டிய அவசியமில்லையாதலால் நமக்கு அந்த எழுத்துக்கள் வேண்டுவதில்லை யென்று கூறுகின்றனர். இக் கூற்றையும் நமது நண்பரவர்கள் "சரி, நியாயமென்று வைத்துக் கொள்வோம்" என்று அங்கீகரிக்க கடமைப் பட்டுள்ளார்கள். முந்திய ஆக்ஷேபமும் பிந்திய கூற்றும் வேறல்லவாகலான் அவ்வாறு நமது நண்பரவர்கள் அங்கீகரிப்பார்களாயின் நமது தமிழ்ப் பாஷை எழுத்துக்களோடு பிறசில பாஷை எழுத்துக்களையேனும் பிற சில குறிகளையேனும் சேர்த்தல் இன்றியமையாத தென்பதைக் காட்டத்தக்க காரணம் ஒன்றும் நமது நண்பரவர்கள் நிரூபத்தில் கூறப்படவில்லை என்பது அதனைப் பார்த்த மாத்திரத்தில் விளங்கும்.

அவ்வின்றியமையாமையைக் காட்டத்தக்க காரணம் ஒன்றேனும் நமது நண்பர்களாவது அவர்களைப் போன்ற வேறு பாஷை திருத்தக்காரர்களாலாவது கூறப்படுமாயின் அப்போது நமது தமிழ்ப்பாஷை எழுத்துக்களோடு பிற சில பாஷை எழுத்துக்களைச் சேர்ப்பதா பிற சில குறிகளைச் சேர்ப்பதா என்னும் விஷயத்தைப் பற்றிச் சிந்திக்கவும் தீர்மானிக்கவும் நாம் முன்வரக் கடமைப்பட்டுள்ளோம்.

தெய்வ பாஷை என்றும் பூரணபாஷை என்றும் பல பாஷைகளுக்கும் தாய்பாஷை என்றும் சொல்லப்படுகிற சமஸ்கிருத பாஷை எழுத்துக்களோடும் பல புதுமைகளையும் திருத்தங்களையும் கொண்டுள்ள பாஷை என்று சொல்லப்படுகிற வங்காளிப் பாஷை எழுத்துக்களோடும் ழ,ற,ன,F,Z என்னும் எழுத்துக்களையாவது அவற்றின் ஒலிகளைக் குறிக்கும் குறிகளையாவது சேர்ப்பதற்கு நமது நண்பரவர்களும் அரவிந்தரவர்களும் முயற்சித்து வெற்றி பெறுவார்களாயின் அவர்கள் நமது தமிழ் மக்களுக்கு ஒப்பற்ற வழிகாட்டி களாவார்கள். பின்னர் நமது தமிழ் மக்கள் அவர்களைப் பின்பற்றத் துணிவார்கள்.

இதுகாறும், தமிழ்ப்பாஷை எழுத்துக்களில் குறையுளது அல்லது தமிழ்ப்பாஷையில் குறையுளது என்று கூறியவர்களில் ஒருவரும் தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பூரணமாகக் கற்றுணுர்ந்தவராகவாவது சமஸ்கிருத சம்பந்தமில்லாதவராகவாவது சமஸ்கிருத பாஷையில் மேற்சொல்லிய திருத்தங்களையோ வேறு திருத்தங்களையோ செய்ய வேண்டு மென்று கூறியவராகவாவது காணப்பட வில்லை என்றும், அவர்கள் நம் தமிழ்ப் பாஷையைத் திருத்த முற்படுகின்றார்களோ வருத்த

முற்படுகின்றார்களோ என்றும் நம் தமிழ் மக்களிற் சிலர் ஐயமுறுகின்றனர்.

நம் தமிழ்ப் பாஷையில் திருத்தம் செய்ய வேண்டும் என்று கூற முன்வருபவர்கள் தமிழ் இலக்கணங்களுக் கெல்லாம் மூலமென்று சொல்லப்படத்தக்கதாயுள்ள தொல்காப்பியம் ஒன்றையும் தமிழ் இலக்கியங்களுளெல்லாம் சிறந்தவையென்று சொல்லப்படத்தக்கனவாயுள்ள சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, திருக்குறள், கலித்தொகை, திருக்கோவையார், கலிங்கத்துப்பரணி முதலியவற்றில் ஒரு சிலவற்றையுமாவது பூரணமாகக் கற்க வேண்டுவது இன்றியமையாதது.

தமிழ்ப்பாஷை எழுத்துக்களிற் பிறபாஷை எழுத்துக்களையோ அவற்றின் சப்தத்தைக் கொடுக்கும் குறிகளையோ சேர்ப்பதும் தமிழ் நாட்டுக் கிராமங்களில் உழவுத் தொழில் செய்து ஊரை விட்டு வெளியேறாதிருக்கும் தமிழ் மக்களும் பிற பாஷையினரின் சம்பந்தம் வேண்டாத தமிழ் மக்களும் அவற்றைக் கற்க வேண்டுவதும் ஆவசியகம் தானா என்பதைத் தீர்மானித்து அதனைத் தக்க காரணங்களோடு நமது 'ஞானபாநு' மூலமாக வெளியிடுவார்களாக"

தமிழில் வருக்க எழுத்துகளையாவது, புதிய குறிகளை யாவது சேர்க்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தியவர்களைப் பற்றி வ.உ.சி. தம் கட்டுரையில் கூறியிருக்கும் செய்தி மிகவும் இன்றியமையாது நினைவில் கொள்ளவேண்டிய ஒன்றாகும்.

"இதுகாறும் தமிழ்ப்பாஷை எழுத்துக்களில் குறையுளது அல்லது தமிழ்ப் பாஷையில் குறையுளது என்று கூறியவர்களில் ஒருவரும் தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பூரணமாகக் கற்றுணர்ந்தவராகவாவது, சமஸ்கிருத பாஷையில் மேற்சொல்லிய திருத்தங்களையோ வேறு திருத்தங்களையோ செய்ய வேண்டுமென்று கூறியவராகவாவது காணப்படவில்லை" என்னும் வ.உ.சி.யின் கூற்று ஆழ்ந்து நோக்குதற்குரியது.

தமிழ் எழுத்துகளையும் மொழிகளையும் குறைகூறிப் பேசுபவர்கள், தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பூரணமாகக் கற்றுணராதவர்கள்; சமஸ்கிருத சம்பந்தம் உள்ளவர்கள்; சமஸ்கிருத பாஷையில் திருத்தங்கள் செய்ய வேண்டும் என்று கூறாதவர்கள் என்று அடையாளம் காட்டுகிறார் வ.உ.சி.

வ.உ.சி.யின் மறுப்பில் கடுமை இருந்தபோதிலும் வாதம் தருக்க நெறியில் அமைந்துள்ளதை உணரலாம். தமிழர் மட்டும் பிறமொழிச் சொற்களை ஏற்க வேண்டும், ஒலிப்பு முறைக்கேற்ற எழுத்து உருவாக்கங்களைப் படைத்துக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துகின்றவர்கள், பிற மொழிகளில் குறிப்பாக, இந்திய மொழிகளில் தமிழுக்கு உரியவற்றை ஏற்றுக் கொள்ளும் விரிந்த மனத்தைப் பெறவில்லையே என்னும் நியாயமான உணர்வைத் தெளிவாக வெளிப்படுத்தும் வ.உ.சி. யின் திறன் நினைத்தற்குரியது.

## மீண்டும் பாரதியார்

பாரதியாரின் பெயரைக் குறிப்பிட்டு வ.உ.சி. எழுதிய கட்டுரைக்கு, வ.உ.சி.யின் பெயரைக் குறிப்பிடாமல் பாரதியார் தந்த பதிலுரை அக்டோபர் 1915 ஞானபாநுவில் வெளிவந்தது. அதன் இன்றியமையாத பகுதிகள் பின்வருமாறு:

> "ஜ, ஷ, ஸ, ஹ, க்ஷ என்ற எழுத்துக்களைத் தமிழ் அரிச்சுவடியில் நமது பூர்வீகர் சேர்த்திருக்கிறார்கள். இவற்றைச் சேர்க்கா விட்டால் தமிழ் நேரே பேச முடியாமலும் எழுதமுடியாமலும் போய்விடுமென்று அவர்களுக்கு அச்சமுண்டாயிற்று.
>
> தொல்காப்பியர் கட்டின அரிச்சுவடி போதாத வண்ணமாக நமது பாஷை வளர்ச்சி பெற்றவுடனே நமது முன்னோர்கள் மேற் காட்டிய எழுத்துக்களையும் சேர்த்தார்கள்.
>
> நாமும் அப்படியே நமக்கு இக்காலத்தில் ஏற்படும் உச்சரிப்புக் கஷ்டங்களை நிவிருத்தி செய்து கொள்வதற்கு, கிரந்த எழுத்துக்களைச் சேர்க்கலாமென்று சில பெரியோர்

கருதுகிறார்கள். ஆனால் அதைக்காட்டிலும் அடையாளங்கள் போடுவது சுலபமான வழி.

பிரெஞ்ச், இங்கிலீஷ் முதலிய ஐரோப்பிய பாஷைகளிலும் ஹிந்தி முதலிய நமது நாட்டு பாஷைகளிலும் - உயிருள்ள பாஷைகளிலே வளர்வன எல்லாவற்றிலும் - உச்சரிப்புத் திருத்தத்தைக் கருதிப் பழைய எழுத்துக்களில் சில அடையாளங்கள் சேர்த்து சௌகர்யப் படுத்திக் கொள்கிறார்கள். இதனால் எழுத்தின் வடிவத்தில் யாருக்கும் சந்தேகம் நேரிடாது. இந்த எளிய வழியை அனுசரித்து நமது தமிழ்மொழி விசாலமடைய வேண்டும் என்பதே என்னுடைய விருப்பம்"

பாரதியாரின் புதிய அடையாளக் குறிகளை அறிய வ.உ.சி. பெருவிருப்போடு காத்திருந்தார்.

''பல காரியங்களின் நிமித்தமாகப் பல பாஷையினரோடு பலவகைச் சம்பந்தங்களை வைத்துக் கொண்டிருக்கிற யானும் நமது நண்பர் ஸ்ரீ.சி. சுப்பிரமணிய பாரதி அந்நிய பாஷைச் சொற்களைத் தமிழில் எழுதுவதற்குக் கண்டுள்ள புதிய முறையின் வெளிவரவை எதிர்நோக்கி யிருக்கின்றேன்" *(சுதேசமித்திரன், 29.10.1915).*

## வாதம் தொடருகிறது

பாரதியாரால் எழுப்பப்பெற்றது, வ.உ.சி.யால் தொடரப்பட்ட தமிழில் எழுத்துக்குறை பற்றிய சிந்தனை கால இடைவெளிகளில் வளர்ந்தது. வேறு பலரும் அந்த வாதத்தைத் தொடர்ந்து நடந்தனர். "சொல் வறுமை" என்னும் தலைப்பில் மேற்குறித்த எழுத்துக் குறைபாட்டினைச் சுட்டிக்காட்டி எஸ்.ஜி. இராமாநுஜலு நாயுடு 1926-இல் எழுதினார் (அக்டோபர், ஆனந்தகுணபோதினி).

"வேறு பாஷைகளிலுள்ள சப்தங்களைத் தமிழ் எழுத்திலே மாற்றி எழுதுவதற்கு எழுத்துப் பெயர்த்தல் என்று பெயர். அன்னியரது

> பதங்களின் அர்த்தத்தைத் தமிழ்ப் பதங்களில் எழுதும் தொழிலை மொழிபெயர்த்தல் (தர்ஜுமா) என்பர். வேறு பாஷைச் சொற்களைத் தமிழில் 'எழுத்துப் பெயர்த்தல்' (உருமாற்றல்) செய்வதற்கு இப்போதுள்ள முக்கியமான தடையாதெனில் நமது அரிச்சுவடியில் போதுமானபடி எழுத்துக்களில்லாமல் இருப்பதே.........
>
> பெங்காளிகள், ஹிந்துஸ்தானிகள் முதலாயினோர் அவர்களுடைய பெயர்களை நாம் வெட்கக்கேடாக எழுதும் ஒலி குறைந்த தன்மையைப் பார்த்துவிட்டு நம்மை எவ்வளவு எளிமை செய்து நகைக்கிறார் களென்பதை நம்மவர்களிலே பலர் அறிய மாட்டார்கள்.........
>
> சென்னைத் துரைத்தனத்தார் நவீனமாகத் தமிழ் அகராதி தயாரிக்க முயன்றபோது நமது தமிழ் நாட்டுக் கவிவாணரான ஸ்ரீமான் ஸி. சுப்பிரமணிய பாரதியாரின் தலைமையின்கீழ் அவ்வேலையைத் தொடங்கியிருப்பராயின் தமிழ் மொழிக்கே ஒரு நூதன ஒளி உண்டாகும்படிச் செய்திருப்பார். சென்றதைச் சொல்லி என்ன பயன்?"

பாரதியாரை நினைவூட்டி, அவருடைய கருத்தை அடியொற்றி அவர் மறைவுக்குப் பிறகும் தமிழ் எழுத்துகள் பற்றிய அவருடைய சிந்தனையைத் தொடர் நினைவாக்கியுள்ளார் எஸ்.ஜி. இராமாநுஜலு நாயுடு.

காலம் வளர்ந்தது, சிந்தனையும் தொடர்ந்தது. 1936-இல் "தமிழ் எழுத்துக்களின் குறையும் உச்சரிப்பு முறையும்" என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வெளிவந்தது. எழுதியவர் இராஜாஜி. 'தொல்காப்பியப்போர்', 'கலைச்சொல்லாக்க முயற்சிகள்', 'பொருளற்ற சண்டைகள்' போன்ற தமிழோடு தொடர்புடைய செய்திகள் பலவற்றைப் பற்றிச் சிந்தித்தவரான இராஜாஜி தமிழ் எழுத்துகள் பற்றியும் எண்ணிப் பார்த்துள்ளார்.

> "தமிழ் எழுத்துக்குறிகள் மிகவும் குறையுடையன என்பது அன்னியர்களுடைய அபிப்பிராயம்.

தமிழில் இராத உச்சரிப்புகளுக்குத் தமிழில் குறிப்புகள் இல்லாதது ஒரு குறையாகாது. ஒப்புக் கொள்ளப்பட்ட குறையை மட்டில் ஆராய்வோம். உண்மையில், சரியாக ஆராய்ந்து பார்த்தால் இந்தக் குறை குறுகிக் குறுகி முற்றிலும் ஒரு விதிக்கு உட்பட்டுப் போவதைக் காண்போம்.

வடமொழிச் சொற்களைத் தமிழில் கொள்ளும் போது அவைகளின் சமஸ்கிருத உச்சரிப்பை வைத்துச் சொல்லவேண்டும் என்பது கூடாது. அது தமிழ் முறையாகாது, மணிப்பிரவாளமாகும்.

தமிழில் உள்ள உயிரெழுத்துக்களும் மெல்லின, இடையின எழுத்துக்களும் குறைவின்றி இருக்கின்றன. வல்லின எழுத்துக்கள் மேற்கண்டவாறு சில விதிகளுக்குட்பட்டு மாறுபாடு இல்லாமல் இடத்தை யனுசரித்து உச்சரிக்கப்பெறுவதால் அவ்வகையிலும் கூறப்படும் குறையானது உண்மையில் குறை ஆகாது.

தமிழ் சொற்களுக்கும் தமிழுக்குமே தமிழ் எழுத்துக் குறிகள் உண்டாக்கப்பட்டவை. பிற பாஷைகளைத் தமிழ் எழுத்தைக் கொண்டு எழுதப்புகின் பல குறைகள் தோன்றும். அதைக் கொண்டு, தமிழ் எழுத்துக்களை நாம் குறை கூறுவதோ இகழ்வதோ கூடாது".

இராஜாஜியின் மேற்கண்ட கட்டுரையின் இன்றியமையாத பகுதிகள் இவை. இருபது ஆண்டுகளுக்கு முன்பு ஒலித்த வ.உ.சி.யின் குரலின் எதிரொலியை 1936-இல் இராஜாஜியிடம் காணமுடிகிறது. வ.உ.சி. போலவே வழக்கறிஞர் தொழிலில் புகழ்பெற்று விளங்கியவரான இராஜாஜி, அவரைப் போலவே தருக்கநெறி நின்று, சான்று பல காட்டி விளக்கியுள்ள பான்மை வ.உ.சி. கருத்துக்கு வலிமை சேர்ப்பதாக அமைந்துள்ளது.

எதையும் கால உணர்வோடும் நியாய உணர்வோடும் செய்யும் இயல்பினரான வ.உ.சி. தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய

தம்முடைய கருத்துகளையும் அதே முறையில் முன் வைத்துள்ளார். பாரதியாரின் வாதத்தின் பொருத்த மின்மைகளைத் தெளிவாகச் சுட்டிக்காட்டிச் செல்கையிலேயே, எழுத்துச் சீர்திருத்தம் சார்ந்த வரலாற்றுக் குறிப்புகளையும் உடன் தந்து அதன் வரலாற்றுப் பின்னணியை அறியவும் அதைத் தொடர்ந்து புதிய தடத்தில் சிந்திக்கவும் வாய்ப்பேற்படுத்தித் தந்துள்ளார். இதை வ.உ.சி.யின் தனிச்சிறப்பாகக் கருதலாம்.

## முடிவுரை

அறியாமை இருளில் முடங்கிக் கிடந்த மக்கள் கூட்டத்தை நீண்ட உறக்கத்திலிருந்து விழித்தெழச் செய்தவர் வ.உ.சி. தம்முடைய வலிமை மிக்க பேச்சாற்றலால் தமிழகத்தில் புதியதொரு எழுச்சியை ஏற்படுத்தியவர். பாமர மக்களுக்கு அரசியல் அறிவை ஊட்டி அவர்களைச் சிந்திக்கப் பழக்கியவர்; விடுதலை இயக்க வரலாற்றில் தமிழகத்தில் முதன் முறையாக, 'பொதுமக்கள் கருத்து' என்ற ஒன்றை உருவாக்க முனைந்தவர்; தம்முடைய பேச்சாற்றலை முழுவீச்சில் அதற்குப் பயன்படுத்தி வெற்றிகண்டவர். தம்முடைய 'முரசம் போன்ற பேச்சால்', 'மேடைப் பேச்சு' என்ற ஒரு புதிய கலையைத் தமிழுக்கு உருவாக்கி வழங்கியவர். இது வ.உ.சி.யின் தமிழ் ஆளுமையின் தலையாயதொரு கூறு.

நாட்டுணர்வு போன்றே மொழி உணர்வும் வ.உ.சி.யுள் கலந்து நிறைந்திருந்த ஒன்றாகும். தனித் தமிழ் நடை பற்றிய அவருடைய சிந்தனைகள் சிறப்பானவை.. 'மகிழ்ச்சியும் நிறைவும் கிடைக்கும்; அதனால் வடசொற்களைப் பயன்படுத்தலாம்' என்றும் 'ஆங்கிலச் சொற்களையும் திசைச்சொற்களாகக் கருதலாம்' என்றும் கருதியோரிடமிருந்து மாறுபட்டவர் வ.உ.சி. ஐரோப்பிய மொழிகளையும் வடமொழியையும் பயன்படுத்தித் தமிழில் புதிய சொற்களை உருவாக்கலாம் என்று புதுச்சொல்லாக்கம் பற்றிக் கருத்துத் தெரிவித்தோர் நடுவே, வடசொற்களின் கலப்பே இல்லாத தனித்தமிழில் புதிய சொற்களை ஆக்கும் ஆர்வமும் நம்பிக்கையும் நிறைந்தவராகத் திகழ்ந்தவர் வ.உ.சி. இதன் வழியே, தனித்தமிழ்ச் சிந்தனை வரலாற்றில் தடம் பதித்தவர்.

✳✳✳✳✳

## வ.உ.சி.யின் நூல்கள்

(கால வரிசை)

| | | |
|---|---|---|
| 1. | மனம் போல வாழ்வு | 1909 |
| 2. | அகமே புறம் | 1914 |
| 3. | மெய்யறம் | 1914 |
| 4. | பாடல் திரட்டு | 1915 |
| 5. | வலிமைக்கு மார்க்கம் | 1916 |
| 6. | இன்னிலை (பதிப்பு) | 1917 |
| 7. | திருக்குறள் - அறத்துப்பால் - மணக்குடவர் உரை (பதிப்பு) | 1917 |
| 8. | எனது அரசியல் பெருஞ்சொல் | 1927 |
| 9. | தொல்காப்பியம் - இளம்பூரணம் - எழுத்ததிகாரம் (பதிப்பு) | 1928 |
| 10. | தொல்காப்பியம் - இளம்பூரணம் - பொருளதிகாரம் (பதிப்பு) | 1928 |
| 11. | மெய்யறிவு | 1929 |
| 12. | சாந்திக்கு மார்க்கம் | 1934 |
| 13. | சிவஞான போதம் | 1935 |
| 14. | திருக்குறள் - அறத்துப்பால் வ.உ.சி. உரை | 1935 |
| 15. | சுயசரிதை | 1946 |
| 16. | வி.ஓ.சி. கண்ட பாரதி | 1946 |

*****

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – **600 113**

அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| AN INTRODUCTION TO RELIGION AND PHILOSOPHY - TEVARAM AND TIVVIYAPPIRAPANTAM | 200.00 |
| பெ.நா. அப்புசுவாமியின் அறிவியல் கட்டுரைகள் தொகுதி-2 | 80.00 |
| குறுந்தொகை - ஒரு நுண்ணாய்வு | 80.00 |
| நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும் | 60.00 |
| இராமாயணம் - தோற்பாவை நிழற்கூத்து | 125.00 |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-4 | 110.00 |
| நாட்டுப்புறக் கதைகளும் நாடக ஆக்கமும் | 30.00 |
| A BUNCH OF ESSAYS ON TAMIL LITERATURE | 30.00 |
| திருக்குறள் பூரணலிங்கம்பிள்ளை ஆங்கில மொழிபெயர்ப்பு | 100.00 |
| தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள் | 40.00 |
| ON TRANSLATING TIRUKKURAL | 50.00 |
| ஐங்குறுநூறு மூலமும் உரையும் | 85.00 |
| தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள் | 40.00 |
| சொற்பிறப்பு - ஒப்பியல் தமிழ் அகராதி | 200.00 |
| THIRUVACHAGAM | 175.00 |
| இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் நாடகங்கள் | 75.00 |
| பெரியாரின் பண்பாட்டுப் புரட்சி | 25.00 |
| தமிழர் கட்டிடக்கலை | 30.00 |
| THE NARRINAI FOUR HUNDRED | 175.00 |
| தமிழ்ச் சமூகவியல் ஒரு கருத்தாடல் | 25.00 |
| தமிழில் ஆவணங்கள் | 75.00 |
| தமிழ் மேடை நாடக வரலாறு | 55.00 |
| பரதநாட்டிய சாஸ்திரம் | 150.00 |
| இந்திய விடுதலைக்குப் பின் தமிழிலக்கியச் செல்நெறிகள் | 55.00 |
| மேலை நோக்கில் தமிழ்க்கவிதை | 100.00 |
| SOUND CORRESPONDENCES BETWEEN TAMIL & JAPANESE | 35.00 |
| அயலகத் தமிழ்க்கலை, இலக்கியம், சமகாலச் செல்நெறிகள் | 125.00 |
| TAMIL LITERATURE AND INDIAN PHILOSOPHY | 200.00 |
| சதகத்திரட்டு தொகுதி-1 | 80.00 |
| தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள் | 70.00 |
| எழுத்திலக்கணக் கோட்பாடு | 70.00 |
| சதகத்திரட்டு தொகுதி-2 | 55.00 |
| தமிழ்ப் பண்பாடு | 25.00 |
| உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடி விளக்க அட்டவணை-4 | 70.00 |
| சுவடிச்சுடர் | 120.00 |
| தமிழிலக்கியத்தில் ஊனமுற்றோர் | 45.00 |
| தமிழக மகளிரியல் | 80.00 |
| தமிழ் மொழி-இன-இலக்கிய மேம்பாடு மறைமலையடிகளாரின் பங்களிப்பு | 20.00 |
| அறிவியல் தொழில் நுட்பக் கல்வி இன்றைய சந்தைச் சவால்கள் | 25.00 |
| ம.பொ.சி யின் தமிழ் உணர்வு | 40.00 |

Pub.No.439 **வ. உ. சி. வளர்த்த தமிழ்** **20.00**